Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

**LIONAIR** இப்போது இரண்டு சேவைகள்

**தினசரி சேவை**

காலை 7.15 கொழும்பு - யாழ்.
காலை 9.15 யாழ். - கொழும்பு

புதன் தவிர்ந்த ஏனைய நாட்களில்

மாலை 3.15 கொழும்பு - யாழ்.
மாலை 5.00 யாழ். - கொழும்பு

பயணக் கட்டணம்

ரூபா 1,999/= மட்டுமே!!

Hotline - 0777-382343, 072-401423. (சி-052)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 ஐப்பசி 10 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷஃபான் 20 (27.10.2002) ஞாயிற்றுக்கிழமை இதழ் : 27

## இன முரண்பாடுகளைத் தீர்க்க கல்வியாளர்களாலேயே முடியும்

### தென்பகுதி ஆசிரியர்கள் மத்தியில் இளம்பரிதி

(யாழ்ப்பாணம்)

இன, மதங்களிடையிலான முரண பாடுகளை அறிவியல் ரீதியாக சிந்தித்து தீர்க்கக் கூடியவர்கள் கல்வியாளர்களே. இவர்கள்தான் அரசியல் மாற்றத்தை கூட தீர்மானிக்கின்றனர். இவ்வாறு நேற்று யாழ்.கல்வித் திணைக்களத்தில் நடந்த கல்வி மறுசீரமைப்பு, சமாதானத்திற்கான பயிற்சி முகாமில் கலந்து கொண்டு பேசிய யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.



கல்வி மறுசீரமைப்பும், சமாதானதற்கான பயிற்சி முகாமும் நேற்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பமானது.

'மீள் நல்லிணக்கத்திற்கும் சமாதானத்திற்குமான கல்வி' என்ற தலைப்பில் இப்பயிற்சி முகாம் நேற்று மாலை 2.30 மணிக்கு கல்வித் திணைக்களத்தின் முகாமைத்துவ பயிற்சி மண்டபத்தில் ஆரம்பமானது.

இந் நிகழ்வில் தெற்குப்பகுதி அதிபர், ஆசிரியர்களும், வடமாகாண அதிபர்களும் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.அரசாங்க அதிபர் பத்மநாதனும், சிறப்பு விருந்தினர்களாக தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்

(10ஆம் பக்கம் பார்க்க)




நேற்றைய வடக்கு - தெற்கு ஆசிரியர் சந்திப்பில் அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

## பலகல்ல - அவுஸ். தூதுவர் சந்திப்பு

(கொழும்பு)

இராணுவத்தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் லயனல் பலகல்லவை அவுஸ்திரேலியத் தூதுவர் டேவிட் எட்வேர்ட பின்ஸ் சந்தித்துப் பேசியுள்ளார்.

அண்மையில் கொழும்பிலுள்ள இராணுவத் தலைமயகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் சமாதான காலத்தில் இராணுவத்தின் பணிகள் பற்றியும் இரு தரப்பு உறவுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டதாக தெரியவருகின்றது.

# வலி.வடக்கு விடுவிப்புப் போராட்டம்;

# புதனன்று மாபெரும் மக்கள் பேரணி!

### வலி.வடக்கு, தெற்கு பொது அமைப்புக்கள் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

**இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள வலி.வடக்குப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து வாழும் மக்கள், தம்மைத் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தக் கோரி, வலி.வடக்கு விடுவிப்புக்கான போராட்டம் - என்னும் பெயரில் பெரும் மக்கள் பேரணி ஒன்றை எதிர்வரும் புதன்கிழமை நடாத்தவுள்ளனர். இப்பேரணியை வலி.வடக்கு, வலி.தெற்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.**

வலி.வடக்குப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த ஆயிரக்கணக்கான குடும் பங்கள் இன்னமும் தமது சொந்த இடங்களுக்குச் சென்று மீளக் குடியமர முடியாமல் உள்ளனர். இப் பகுதிகளில் உள்ள உயர் பாதுகாப்பு வலயத்தைக் காரணம் காட்டி பொதுமக்கள் அப்பகுதிகளுக்குச் செல்வதை படையினர் தொடர்ந்தும் தடைசெய்து வருகின்றனர். இவ்வாறான நிலைமையில் மேற்படி பகுதிகளில் செயற்படும

(10ஆம் பக்கம் பார்க்க)

## 2 ஆம் கட்ட பேச்சுக்கான ஆயத்தம்; சொல்ஹெய்ம் தாய்லாந்து பயணம்!

### இம்முறை பேச்சுக்கள் ஹோட்டேலில்

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் தாய்லாந்தில் இம்மாதம் 31 ம் திகதி நடைபெறவுள்ள 2ம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவென நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம தாய்லாந்து பயணமாகியுள்ளார்.

பாங்கொக் அருகிலுள்ள புறநகரான நொகன்பத்தமின் - ரோஸ் கார்டன் ஹோட்டேலில் இம்முறை பேச்சுக்கள் நடைபெறவுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த ஹோட்டேல் சிறந்த மருத்துவ வசதி கொண்டது. கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் உடல் நிலையைக் கருத்தில் கொண்டே இது தெரிவு செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## எமது துன்பங்களைப் பொறுக்க கால எல்லை ஒன்று உண்டு

### பொது அமைப்புக்கள் மகஜர்

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கிலிருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்த மக்களின் துயரவாழ்வு குறித்துக் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரிடம் மகஜர் ஒன்று நேற்றுக் கையளிக்கப்பட்டது.

வலி.வடக்கு, வலி.தெற்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம் மேற்படி பகுதி மக்களின் துயர வாழ்வு குறித்தும் அவர்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று மீளக்குடியமர எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வி அடைந்தமையைக் குறிப்பிட்டு இம் மகஜரை கையளித்துள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவமகாராசா, வலி.வடக்கு, தெற்கு பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் எஸ் குமாரவேல்

(10ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்களுக்கான தனி அலகு நியாயமானது என்கிறார் ரணில்

(கொழும்பு)

நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களை, நேற்றுச் சந்தித்த - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அவர்கள் முன் வைக்கும் முஸ்லிம்களுக்கான தனி அலகுகள் கோரிக்கை நியாயமானது எனத் தெரிவித்துள்ளார்.

பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வரும் எம்.பிக்கள் 9 பேரில் - நூர்தீன் மசூர், அதாவுல்லா, ஹாரிஸ், அன்வர் இஸ்மாயில் உட்பட 6 எம்.பிக்கள் நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

எனினும் தனது கட்சியினரோடு கலந்தாலோசித்த பின்னரே இது பற்றி உறுதியான முடிவைத் தெரிவிப்பதாகவும் ரணில் விக்கிரமசிங்க கூறியதாக அவரைச் சந்தித்த எம்.பிக்கள் தெரிவித்தனர்.

### விண்ணாணம் விநாசியர்



உந்த அரசியல்வாதியள் எப்பதான் சரியான முடிவை சரியான நேரத்தில எடுத்தவை..?

## பயங்கரவாதத் தடைச் சட்டம் எதிராக திருச்சபை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தை அகற்றும்படி கோரி அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில், பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு கத்தோலிக்க திருச்சபை முயற்சி எடுத்து வருகின்றது. பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் பாதிப்புக்கள் குறித்தும் இச்சட்டத்தை அகற்ற வேண்டியதன் அவசியம் குறித்தும் பொதுமக்களுக்கு விளக்கமளிப்பதற்கும், விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் செயற்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 22ஆம் 23 ஆம் திகதிகளில் கத்தேலிக்க திருச்ச

(10ஆம் பக்கம் பார்க்க)

## பிழையான நேரத்தில் சரியான முடிவு

### பகிஷ்கரிப்புப் பற்றி ரவூப் ஹக்கீம்

(கொழும்பு நிருபர்)

சரியான முடிவை சரியான நேரத்தில் எடுத்தலே சரியானது. சரியான முடிவை பிழையான நேரத்தில் எடுத்தால் அது பிழையானது என முன்.பொருமுறை அஷ்ரப் சொன்னதே நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள எம்.பிக்களுக்குப் பொருத்தமானது என முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கண்டி- கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்ற அஷ்ரப்பின் 54வது பிறந்தநாள் நினைவு நிகழ்வில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு கூறினார். (10ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே - இன்றைய சிறப்பிதழ் விளையாட்டு அரங்கம்

# வளைகுடாவில் யுத்தம் வெடித்தால் இலங்கையரை மீட்கத் திட்டம் தயார்!

வளைகுடாவில் யுத்தம் ஏற்படும் பட்சத்தில் மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களை விமானம், கப்பல் மூலமாக நாட்டுக்கு அழைத்து வருவதற்கான திட்டமொன்றை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தயாரித்துள்ளது.

உயர் அதிகாரிகள் குழு ஒன்று மத்திய கிழக்கு நாடுகளுக்கு இந்த உத்தேசத் திட்டத்திற்கான நடவடிக்கைகளைத் தொடர்வதற்காக சென்றிருப்பதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் யுத்தம் ஒன்று ஏற்படக் கூடிய சூழ்நிலை தற்போது இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## வவுனியாவில் பொது இடங்களிலிருந்து படையினரை வெளியேறுமாறு கோரிக்கை!

### செட்டிக்குளம் பிரதேச பிரஜைகள் குழு மகஜர்

(வவுனியா நிருபர்)

செட்டிக்குளம் பிரதேச பிரஜைகள் குழு - பொது இடங்களில் தங்கியுள்ள படையினரை வெளியேற வேண்டும் எனக்கோரி பேரணி ஒன்றை நடத்தி வவுனியா அரச அதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளது.

பொது இடங்களில் இருந்து படையினர் 160 நாட்களுக்குள் வெளியேற வேண்டும் என புரிந்துணர்வு உடன்பாட்டில் கூறப்பட்டுள்ள போதும் அது நிறைவேற்றப்படவில்லை. தொடர்ந்து இந்த உடன்பாட்டை நிறைவேற்றத் தவறி வருவதனைக் கண்டித்துள்ள பிரஜைகள்குழு, தாமதியாமல் படையினரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளது.

இந்தமகஜர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சர்வதேச யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு, அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## கடையின் முன் நீர் தெளித்த வர்த்தகர் வீதியில் வந்தவரால் தாக்கப்பட்டார்

நேற்றுக்காலை கஸ்தூரியார் வீதியில் இயங்கும் கடை ஒன்றின் வர்த்தகர் தாக்குதலுக்கு உள்ளானதாகத் தெரியவருகிறது.

நேற்றுக்காலை கடையின் முன்பாக நீர் தெளித்துக்கொண்டிருந்தபோது வீதியால் மோட்டார் சைக்கிளில் வந்த அரச ஊழியர் ஒருவர் மீது - நீர் பட்டதால் அவர் முற்றாக நனைந்தார். இதனால் ஆத்திரமடைந்த அவர் வர்த்தக நிலையத்துக்குள் புகுந்து குறிப்பிட்ட வர்த்தகரைத் தாக்கியதாகத் தெரியவருகிறது.

## ஈழத்துச் சிதம்பர ஆலயக் கோபுரம் மின்னல் தாக்கிச் சேதமடைந்தது

(தாவடி)

ஈழத்துச் சிதம்பரம் என்றழைக்கப்படும் காரைநகர் சிவன் ஆலயத்தின் பிரதான கோபுரம் மீது அடுத்தடுத்து மின்னல் தாக்கியதில் சேதத்துக்குள்ளாகியது.

நேற்று முன்தினம் பெய்த பெருமழையின் போது மின்னல் தாக்கியதால் ஆலயத்தின் பிரதான கோபுரம் சேதமாகியதுடன் கோபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள உருவப் பொம்மைகள் உடைந்து கீழே விழுந்ததாகவும், கோபுரத்தில் வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

சகல அளவுகளில் கறுப்பு வெள்ளைப் படங்களையும்,
மங்கள நிகழ்வுகளை சிறந்த முறையில் கலர்ப்படம் பிடித்துக் கொள்ளவும்,
அல்பம் தயாரித்தலுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்
சர்மிளா போட்டோ
302, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

### மீசாலை ஆலயத்தில் திருட்டு

(மீசாலை)

மீசாலையிலுள்ள வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலயத்தில் வியாழன் இரவு திருட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

கூரையைக் கழற்றி உள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்து நகைகள், உண்டியல் பணம் என்பவற்றை எடுத்துச் சென்றுள்ளனர். (30)

### இந்து சமயப்பேரவை நிர்வாகசபைக் கூட்டம்

(ஊரெழு)

யாழ்.மாவட்ட இந்து சமயப் பேரவையின் நிர்வாக சபைக் கூட்டம் இன்று மாலை 3 மணிக்கு அருட்கவி சி.விநாசித்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் தீபாவளி சமாதானப் பிரார்த்தனை, கைதடிச் சிறுவர் இல்லப் புனரமைப்பு, வலி - வடக்கு மீள் குடியேற்றம் தொடர்பான விடயங்களோடு - பலாலித் தளத்தைச் சூழவுள்ள 100 ஏக்கர் பிரதேசத்தை சமாதானப் பிரதேசமாக பிரகடனம் செய்யவுள்ளமை தொடர்பாக ஜனாதிபதியிடம் மகஜர் கையளிப்பது பற்றியும் ஆராயப் படவுள்ளது. (96)

### கராத்தே சுற்றுப் போட்டி கருத்தரங்கு

'வித்து' மாணவர் சஞ்சிகையின் ஆதரவில் கராத்தே சுற்றுப் போட்டிக்கான கருத்தரங்கு இன்று திருநெல்வேலி இந்து இளைஞர் மண்டபத்தில் மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

கொழும்பு ஜப்பான் கராத்தே கழகத்தில் இருந்து மத்தியஸ்தர்கள் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொள்ளவுள்ளனர்.

நாளை காலை 9 மணிக்கு கராத்தே சம்பந்தமான பயிற்சிப் பாசறையும் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (39)

### ஆற்றுகைகள் இன்று மேடையறும்

நாடக அரங்கக் கல்லூரியின் சான்றிதழ் கற்கை நெறி - 2002 இற்கான நாடகத் தயாரிப்பு ஆற்றுகைகள் பல்வேறு இடங்களில் மேடையேற்றப்படவுள்ளன.

இன்று மாலை 3 மணிக்கு கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் ந.நவராஜின் 'காவுகொள்ளும் அரண்கள்' விஜயகுலசிங்கத்தின் 'கற்பனை கடந்த' கே.எஸ்.மயூரனின் 'குட்டித் தந்திரம்' ஆகிய ஆற்றுகைகள் மேடையேறவுள்ளன.

## சிறந்த பண்ணையாளர்களை தெரிவு செய்வதற்குப் போட்டி

(வடமராட்சி)

சிறந்த பண்ணையாளர்களை தெரிவு செய்வதற்கான போட்டி, கால்நடை உற்பத்தித் திணைக்களத்தினால் பிரதேச ரீதியாக நடாத்தப்படவிருக்கின்றது.

ஆடு, மாடு, கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள பண்ணையாளர்களில் சிறந்த முறையில் பண்ணைகளை நிர்வகித்து வருவோரிடையே ஒவ்வொரு கால்நடைகளுக்கும் தனித்தனியாக போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

ஒவ்வொரு கால்நடை வைத்தியர் பிரிவிலும் நடாத்தப்படும் இப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெறுவோருக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

சிறந்த பண்ணையாளர்கள் தெரிவுப் போட்டிக்கான விண்ணப்பங்களை கால்நடை உற்பத்தி உதவிப் பணிப்பாளர் கோரியுள்ளார்.

விண்ணப்பத்தை கால்நடை வைத்தியசாலை பிரதேச அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (23)

## அரியாலை பார்வதி வித்தியாலயத்தை சொந்த இடத்தில் இயக்குமாறு கோரிக்கை

(வடமராட்சி கிழக்கு)

யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் இயங்கிவரும் யாழ். அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையை சொந்த இடத்திற்கு மாற்றி மாணவர்களின் கல்வி அபிவிருத்தி மேம்பாட்டிற்கு நடவடிக்கை எடுத்து உதவுமாறு கல்வித் திணைக்களத்திடம் பழைய மாணவர்களாலும், பெற்றோர்களாலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வித்தியாலயம் 2000ஆம் ஆண்டு கனகரத்தினம் மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றப்பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்டு சமாதான சூழல் உருவாகி வரும் வேளையில் இவ்வித்தியாலயம் சொந்தக் கட்டடத்தில் இயங்க வைக்க கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுக்காதது கவலைக்குரியதென்றும் பாடசாலைச் சமூகம் தெரிவிக்கின்றது. (17)

## கோழி வளர்ப்பில் நவீன உத்தி குடாநாட்டில் கருத்தரங்கு

யாழ்.மாவட்டத்திலுள்ள கோழி வளர்ப்போருக்கு வளர்ப்பு முறைகள் பற்றிய நவீன உத்திகள் தொடர்பான பயிற்சிப்பட்டறை வழங்குவதற்கு கொழும்பிலிருந்து விரிவுரையாளர்கள் யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

வடமராட்சிப்பகுதியில் கோழி வளர்ப்பில் ஆர்வமுடையவர்களுக்கு நவம்பர் 22ஆம் திகதி பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியிலும் மறுநாள் 23ஆம் திகதி யாழ்ப்பாணம் திருநெல்வேலி விவசாயப்பயிற்சிக் கல்லூரியிலும் கருத்தரங்கு நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

கோழிவளர்ப்பில் ஈடுபட்டிருப்போர் மாணவர்கள், ஆசிரியர்கள், வர்த்தகர்கள ஆகியோர் இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள முடியுமென தெரிவிக்கப்படுகின்றது.

பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்புவோர் முன்கூட்டியே கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகங்களில் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நவ நாகரிகத்திற்கு ஏற்ப
புடைவை தினுசுகளின் பொக்கிஷம்
சௌமியா ரெக்ஸ்
இல.4, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 0777-101980

SUNDHARSON
Importers & Distributors of
Electrical Items, P.V.C.pipes & Fittings Etc.
Central Market View,
Manipay.
T.P. / Fax :
021 - 2222751
தீபாவளிப் பரிசுப் போட்டி
சுந்தர்சன்
மத்திய சந்தை முன்பாக
பிரதான வீதி, மானிப்பாய்.
உள்ளூரிலேயே மக்கள் சேவையை சிரமேல் கொண்டு
கடந்த 22 ஆண்டு காலமாக
❑ மின்சார உபகரணங்கள்
❑ P.V.C.நீர்க் குழாய்கள், இணைப்புக்கள்
❑ அலங்காரப் பொருட்களை
நிதானம், நியாயம், உத்தரவாதத்துடன் மொத்தமாகவும்,
சில்லறையாகவும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள
சுந்தர்சன் மானிப்பாய
தீபாவளி - 2002 பரிசுப் போட்டி விபரம்
25.10.2002 - 06.10.2002 வரையிலான காலப்பகுதியில் எமது ஸ்தாபனத்தில் அதி கூடிய தொகைக்கு பொருட்களைக் கொள்வனவு செய்யும
○ வீட்டு உரிமையாளர்கள் மூவருக்கும்
○ வர்த்தகப் பிரமுகர்கள் மூவருக்கும்
○ கட்டட ஒப்பந்தக்காரர்கள் மூவருக்கும்
○ மின் இணைப்பாளர்கள் அறுவருக்கும்
அதிசயிக்கத்தக்க பெறுமதிவாய்ந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.
ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்
மத்திய சந்தை முன்பாக
பிரதான வீதி, மானிப்பாய்.
சுந்தர்சன் உரிமையாளர்
T.P./ Fax - 2222751
(சி-092)

தீபாவளியை முன்னிட்டு
புதிய கனன் போட்டோக் கொப்பி மெஷின்
அறிமுகப்படுத்தப்படுகிறது
NP 7161 - விலை 167,000 /- + VAT + TAX
NP 1215 - விலை 155,000 /- VAT + TAX உட்பட


Canon
NP 7161
பாவித்த சகலவிதமான
போட்டோ கொப்பி மெஷின்
ஆகக் கூடிய விலை 40,000/- ற்கும்,
ஆகக் குறைந்தது 10,000/- ற்கும்
எங்களால் கொள்வனவு செய்யப்படுவதுடன்
இதன் பெறுமதிக்கேற்ப
புதிய மெஷின் (NP 7161)
விலை கழிக்கப்படும்.
நவகலா
Metro Politon Agent
200, K.K.S. Road,
யாழ்ப்பாணம்.
(சி-064)

# நிரந்தர சமாதானத்தையே சர்வதேசம் விரும்புகின்றது

## கொழும்பு வந்த அமெரிக்க அமைச்சர் வலியுறுத்து

(கொழும்பு)

நன்றாகத் திட்டமிட்ட அணுகுமுறைகளுடன் நாட்டின் சமாதான முயற்சிகள் முன்னெடுத்து செல்லபபட்டால் அது நல்ல பலாபலனைத் தரும் என தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்காவின் துணை அமைச்சர் டொனால்ட் காம்ப் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இவர் நேற்றுமுன்தினம் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்ணானடோவைச் சந்தித்துப் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு இரு தரப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதையே சர்வதேச சமூகத்தினர் விரும்புகின்றனர் எனவும் அவர் அங்கு தெரிவித்தார்.

பெர்ணானடோ இது சம்பந்தமாக தெரிவிக்கும்போது- தாம் டொனால்ட்டின் கருத்துக்களுடன் உடன்படுவதாகவும் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்புக்களும் நேர்மையாக ஒத்துழைக்க வேண்டும் எனக் கூறினார்.

நாட்டின் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும் ஏற்படுத்துகின்ற கருத்து ஒற்றுமை விடுதலைப புலிகளுடனான பேச்சுவார்த்தையில் வெற்றி பெறுவதற்கு உதவும். அது அனைவருக்கும் நன்மை தரக்கூடிய தீர்வுக்கு வழிவகுக்கும் என்ற கருத்துக்களுடன் இருவரும் உடன்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தெற்காசியப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான அமெரிக்கத் துணையமைசசர் டொனால்ட் காம்ப் மூன்று நாட்கள் விஜயத்தை மேற்கொண்டு 24ம் திகதி கொழும்புக்கு வந்திருந்தார். இவர் கொழும்பிலிருந்தபோது பலதரப்பட்ட அரசியல் பிரமுகர்கள், வர்த்தகப் பிரமுகர்களுடனும் கலந்துரையாடினார்.

இவர் 1975 முதல் 1977ஆம் ஆண்டு வரை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக இருந்தவரென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஜெனரல் ரத்வத்தையின் சொத்து விபரத்தை பாராளுமன்றச் செயலாளர் சமர்ப்பித்தார்!

(கொழும்பு நிருபர்)

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவின் சொத்துக்கள், பொறுப்புக்கள் தொடர்பான விடயத்தைப் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் கையளித்துள்ளார்.

முன்னதாக லஞ்ச ஊழல் ஆணைக்குழு ஜெனரல் ரத்வத்தவின் சொத்துக்கள், பொறுப்புக்கள் தொடர்பான விபரத்தை சமர்ப்பிக்குமாறு, சபாநாயகரின் அனுமதியுடன் பாராளுமன்றச் செயலாளரைக் கோரியிருந்தது.

அப்போது பாராளுமன்றச் செயலாளர், ரத்வத்தவின 1994ஆம் ஆண்டுக்கான சொத்து விபரப் பதிவேட்டின் பிரதி மட்டுமே ஜனாதிபதி செயலகத்தால் தமக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக லஞ்ச ஊழல் ஆணைக்குழு மேல் நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராகி வந்த நிலையிலேயே பாராளுமன்றச் செயலாளர் நாயகம், ஜெனரல் ரத்வத்தயின் சொத்துக்கள், பொறுப்புக்கள் குறித்த விபரங்களைக் கையளித்திருக்கின்றார்.

இதேவேளை- லஞ்ச ஊழல் ஆணைககுழு அதிகாரிகள், வருமானவரித் திணைக்களத்திடம் இருந்தும் சில விபரங்களைக் கோரியிருப்பதாகத் தெரியவருகிறது. ஜெனரல் ரத்வத்தயின் வங்கிப் பெட்டகங்களில் சுமார் 4.3 மில்லியன் ரூபா பெறுமதியான வைப்புச் சான்றிதழ்களை வைத்திருந்ததை லஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் கண்டுபிடித்து அது தொடர்பான விசாரணைகள் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.



வங்கிப் பெட்டகங்களில் இருந்த வைப்புச் சான்றிதழ்களில் சில தமது வெளிநாட்டு நண்பர்களினுடையவை என்று ஜெனரல் ரத்வத்தயின் மனைவியான ரமணி ரத்வத்த கூறியிருந்ததும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

## ஞானபண்டித வித்தியாலயத்துக்கு 4 இலட்சம் ரூபா

(கொக்குவில் மேற்கு)

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாலய கட்டடப்புனரமைப்புக்கும், தளபாடப் கொள்வனவுக்காகவும் 4 இலட்சம் ரூபாவினை ஜி.ரி. இசட் நிறுவனம் வழங்கியுள்ளது.

கடந்த மூன்று மாதங்களாக பாடசாலையில் சேரும் மாணவர்களின் தொகை அதிகரித்துள்ளமையால் வகுப்பறைகள் பற்றாக்குறையாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (108)

## விசாரணைகளில் 60 பேர் சாட்சியம்

(காஞ்சிரங்குடா)

காஞ்சிரங்குடா அதிரடிப்படை முகாம் சம்பவம் தொடர்பான விசாரணைகளில் இதுவரை 60 பேர் சாட்சியமளித்துள்ளனர். புலிகள் தரப்பிலிருந்தும் அதிரடிப்படை தரப்பிலிருந்தும், பொதுமக்கள் தரப்பிலிருந்தும் பலர் விசாரணைக் குழு முன் சாட்சியமளித்துள்ளனர். (15)

## தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை ம.வி. பரிசளிப்பு விழா

(அச்சுவேலி)

யாழ். தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் க.தவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.அருளானந்தமும் சிறப்பு விருந்தினராக நற்பணி மன்றத் தலைவர் இ.சண்முகலிங்கமும் கலந்துகொள்ளவுள்ளனர். (76)

## உழவு இயந்திரம் படையினரால் மீளளிப்பு

(மீசாலை)

கடந்த யுத்த அனர்த்தங்களின் போது இராணுவத்தினரால் எடுத்துச் செல்லப்பட்ட- சாவகச்சேரி கமநல சேவை நிலையத்திற்கு சொந்தமான உழவு இயந்திரம் - நேற்றுமுன்தினம் படையினரால் மீளளிக்கப்பட்டுள்ளது. (25)

## சோலார் கட்டணம் செலுத்தாத மோட்டறோலா தொலைபேசிகள் துண்டிப்பு

(மீசாலை)

யாழ்.மாவட்டத்தில் உள்ள "மோட்டறோலா" தொலைத் தொடர்பு வசதியை பெற்றுக் கொண்டோரில் சூரியகலத்திற்கான (சோலார்) பணத்தினைச் செலுத்தாத பாவனையாளர்கட்கு ரெலிகொம் நிறுவனத்தினர் தொடர்பைத் துண்டித்துள்ளனர்.

கடந்த 22ஆம் திகதி தொடக்கம் இவர்களுக்கான தொடர்பு துண்டிக்கப்பட்டிருக்கிறது. சூரியகலத்திற்காக வருடாந்தம் ரூ.30,000 தொடக்கம் ரூ.60,000 வரையிலான பணத்தை செலுத்த வேண்டுமென ரெலிகொம் நிறுவனத்தினர் கூறுகின்றார்கள். எனினும் இச்சூரியகலத்தின் பெறுமதி ரூ.18,000 மாத்திரமே.

பாவனையாளர்கள் தாமே சூரிய கலத்தினைப் பொருத்திப் பாவிப்பதற்கும் ரெலிகொம் நிறுவனத்தினர் அனுமதி மறுத்து வருகின்றனர். இது தொடர்பாக நாளாந்தம் பாதிக்கப்பட்டோர் ரெலிகொம் நிறுவனத்திற்கு சென்று வருவதைக் காண முடிகிறது.

இது தொடர்பாக தொலைத் தொடர்பு அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மார்க்கர் சில மாதங்களின் முன் யாழ். வந்திருந்த அவருக்கு தெரியப்படுத்தியபோது, இதனை நீக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்திருந்தும் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. (25)

## மட்டக்களப்பில் மீண்டும் காவல்துறை அலுவலகம்

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பழுகாமம் பகுதியில் காவல்துறை அலுவலகம் திறந்து வைக்கப்படவுள்ளது. நவம்பர் முதலாம் திகதி திறந்து வைக்கப்படவுள்ள இந்த அலுவலகத் திறப்பு விழாவில் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் மட்டு.- அம்பாறைப் பிராந்திய விசேட தளபதி ரமேஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மட்டக்களப்பில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சுமார் ஐந்து வருடங்களின் பின்னர் தமிழீழ காவல் துறையின பணிமனை மீண்டும் செயறபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுகாதார, ஆசிரிய சேவை வெற்றிடங்கள் இவ்வருட இறுதிக்குள் நிரப்ப முடிவு!

(கொழும்பு)

சுகாதார சேவை, ஆசிரிய சேவைகளில் உள்ள வெற்றிடங்கள இந்த வருடத்துக்குள் நிரப்பப்படும் என்று கடந்த 23ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை- ஏனைய அமைச்சுக்களில் உள்ள அவசிய வெற்றிடங்களையும் , நிரப்புவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

வெற்றிடங்கள் பற்றிய தகவல்களைத் திரட்டுவதற்கு, அடுத்த மாதமளவில் சகல அமைச்சுக்களின் செயலாளர்களையும், மற்றும் திணைக்கள அதிகாரிகளையும் அழைத்துக் கலந்துரையாட இருப்பதாக, அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை- அரச சேவையில் ஆட்களை நியமிப்பதை இடைநிறுத்துவதாக அரசாங்கம் முன்னதாக தீர்மானம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்தத் தீர்மானத்தில் சில அவசிய சேவைகளுக்கு விலக்களிக்க இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

## சமாதான முயற்சிகளுக்கு ஜனாதிபதி பூரண ஆதரவு வழங்கவேண்டும்

### தமிழ்க் கட்சிகள் கூட்டாகக் கோரிக்கை

(கொழும்பு)

சமாதான முயற்சியில் குற்றங்குறை காணாது அரசுக்கு ஜனாதிபதி பூரண ஆதரவு வழங்க வேண்டுமென்று, தமிழ்க் கட்சிகள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரசுக்கும் ஜனாதிபதிக்குமிடையே சமாதானப் பேச்சுவார்த்தைகள் பற்றி அடிக்கடி முரண்பாடுகள் ஏற்படுவதையிட்டே, தமிழ்க் கூட்டமைப்பினர் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தனர்.

## பிரதேச செயலக, பிரதேசசபை ஊழியர்களை மத்திய அரசின் கீழ் உள்ளீர்க்க ஏற்பாடு

(நமது நிருபர்)

நாட்டின் அனைத்து பிரதேச செயலகங்கள், பிரதேசசபைகள் ஆகிய அலுவலகங்களில் கடமையாற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் தவிர்ந்த ஏனைய உத்தியோகத்தர்களை மத்திய அரச ஆளணியின் கீழ் உள்ளீர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கைகளை உள்ளூராட்சி, மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக அமைச்சின் செயலாளர் ஏ.ஜ.விக்கிரம சகல பிரதேச செயலகம், பிரதேசசபை செயலாளர்களுக்கும் சுற்றுநிருபம் அனுப்பி வைத்துள்ளார்.

பொது எழுதுவினைஞர்,சிறாப்பர், கணக்குப்பதியுநர்,சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர், களஞ்சியக் காப்பாளர், மொழிபெயர்ப்பாளர், சாரதிகள், அலுவலகப்பணியாளர், தரவுப்பதியுநர் ஆகிய சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களே மத்திய அரச ஆளணியின் கீழ் உள்ளீர்ப்புச் செய்யப்படவுள்ளனர்.

மேற்படி உத்தியோகத்தர்களின விபரங்களை இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு அமைச்சின் செயலாளர் கேட்டுள்ளார். (100)

## தமிழீழ நீதிமன்றின் சான்றுகளை சிறிலங்கா நீதிமன்றம் ஏற்கும்

### யாழ். மாவட்ட நீதவான் உத்தரவு

(நமது நிருபர்)

யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வழக்கொன்றில் தமிழீழ நீதிமன்றச் சான்றுகளை, இயற்கையின் நீதியின் பால் உண்மைகளை கண்டறிந்து கொள்வதற்காகவும், சான்றுக் கட்டளைச்சட்டத்தின் 165 ஆம் பிரிவின் சாராம்சத்தின்படியும் ஏற்றுக் கொள்ளலாம் என யாழ் மாவட்ட நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றத்தில் நடைபெற்ற காணி சம்பந்தமான வழக்கிலேயே மேற்படி உத்தரவை யாழ். நீதவான் பிறப்பித்துள்ளார். (லி)

## வவுனியாவில் பயிர்ச்செய்கை கட்டுப்பாட்டை நீக்கக் கோரிக்கை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தின் சில பகுதிகளில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்குப் படையினர் விதித்திருக்கும் கட்டுப்பாடுகளை உடனடியாக நீக்குமபடி பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வவுனியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மேற்படி கோரிக்கை அடங்கிய கடிதம் ஒன்றை பாதுகாப்பு அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

## பொலிஸ், தேர்தல் ஆணைக்குழுக்கள் இவ்வருட இறுதிக்குள் செயற்படும்

### ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

சுதந்திர பொலிஸ் ஆணைக்குழு, சுதந்திரத் தேர்தல் ஆணைக்குழு ஆகிய இரண்டையும் இந்த வருட இறுதிக்குள் அமைப்பதற்கு உத்தேசித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்த இரண்டு ஆணைக்குழுக்களிலும் இடம்பெறும் பிரதிநிதிகளின் விபரங்களை எதிர்வரும் டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் அரசியலமைப்புச் சபை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கும் என்று அவர் மேலும் கூறினார்.



மெக்சிக்கோவில் வீசிய பெரும் புயற்காற்றில் சிக்கிய 'பாம்' மரங்களைப் படத்தில் காணலாம். இப்புயலினால் பெரும் எண்ணிக்கையான வீடுகளும், மரங்களும் பாரிய சேதத்தைச் சந்தித்துள்ளன.

# ரஷ்ய அதிரடிப்படைத் தாக்குதலில் பணய நாடகம் முடிவுக்கு வந்தது!

(மொஸ்கோ)

மொஸ்கோ நாடக அரங்கினுள் மூன்று நாட்களாக எண்ணூறு பேரைப் பணயக் கைதிகளாக வைத்திருந்த செச்சினியப் போராளிகளின் நடவடிக்கை, ரஷ்ய இராணுவத்தினரால் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது.

நேற்று மாலைவரை பணயக் கைதிகளை வெளியே அகற்றும் முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்தன. பல செச்சினியப் போராளிகள் கைது செய்யப்பட்டுள்ள அதேவேளை, சில போராளிகள் கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இம் மீட்பு நடவடிக்கையின் ஆரம்ப கட்டத்தில் - பாரிய குண்டு வெடிப்புக்களும், துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் அரங்கப் பகுதியில் கேட்டதாக எஜென்சி செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை, இருபது சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. காயமடைந்தவர்கள் அவசரஅவசரமாக வெளியேற்றப்பட்டனர்.

இந்நடவடிக்கை பற்றி ரஷ்ய அதிபர் புட்டின் கருத்துத் தெரிவிக்கையில் - விசேட அதிரடிப்படையினரால் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் தற்போது கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.



மொஸ்கோவில் பணயக் கைதிகளாக பிடித்து வைக்கப்பட்டிருந்தோரை மீட்கும் முயற்சியில் ஈடுபட்ட விசேட அதிரடிப்படையினரைப் படத்தில் காணலாம்.

# அமெரிக்க செனட்டர் விமான விபத்தில் பலி!

(வொஷிங்டன்)

நேற்று நடைபெற்ற விமான விபத்து ஒன்றின்போது அமெரிக்காவின் செனற் உறுப்பினர் போல் வெல்ஸ்ரோன் மரணமானார்.

அமெரிக்க செனட் சபையின் ஜனநாயகக் கட்சியைச்சேர்ந்த வெலஸ்ரோன், இடைக்கால தேர்தல் நடைபெறுவதற்கு இன்னமும் இருவாரங்கள் இருக்கும் நிலையில் விமான விபத்தில் இறந்திருப்பது, செனட் சபையின் ஒரு வாக்கின் மூலம் பெரும்பான்மையைப் பெறும் ஜனநாயகக் கட்சிக்கு அரசியல் நெருக்கடிகளைத் தோற்றுவித்துள்ளதாக - அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

சீரற்ற காலநிலை காரணமாக - மூடு பனியுடன் கூடிய பனிமழையால் இவ்விமான விபத்து நிகழ்ந்ததாக அறிய முடிகின்றது. செனட் போல் விமான நிலையத்திலிருந்து வேர்ஜினியா மாநகரசபை விமான



நிலையத்திற்கு விமானம் பறந்து கொண்டிருக்கையிலேயே மேற்படி சம்பவம் நடைபெற்றுள்ளது.

இவ்விமான விபத்தின்போது செனட் உறுப்பினர் வெல்ஸ்ரோனுடன் அவரது மனைவி மற்றும் மகள் மாக்கியா (Marcia) மற்றும் அவரது பிரசார பகுதியின் பதவி நிலை உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கொல்லப்பட்டுள்ளனர்.

அதேவேளை, அவரது குடும்பத்தின் உறுப்பினர்களில் இரு மகன்மார் இவ்விமானத்தில் பயணிக்காதபடியால் உயிர்தப்பியுள்ளனர்.

விமான விபத்தின்போது கொல்லப்பட்ட செனட் உறுப்பினர் வெல்ஸ்ரோன் தலைநகர் வாஷிங்டனில் பிறந்து வட வேர்ஜினியாவில் வாழ்ந்து வந்தவர் என்பதும், இவரது பெற்றோர் ரஷ்யாவிலிருந்து சென்று அமெரிக்காவில் குடியேறியவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.




# காவிரி நதிநீர்ப் பங்கீட்டு விவகாரத்தில் உச்சநீதிமன்றை அவமதித்த கர்நாடகா!

காவிரித் தண்ணீரை தமிழ் நாட்டிற்கு திறந்து விடும்படி கர்நாடக அரசிற்கு உச்சநீதிமன்றம் உத்தரவு இட்ட பின்பும், அவ்வுத்தரவின்படி செயற்பட மறுத்த கர்நாடக அரசை பதவி விலகுமாறு உச்சநீதிமன்ற நீதிபதிகள் கோரியுள்ளனர். மேலும் காவிரி நீரை உடனடியாக திறந்து விடும்படியும் உத்தரவிட்டுள்ளனர்.

ஆனால், தமிழ் நாட்டுக்கு தண்ணீர் திறந்து விடுவதற்கு, கர்நாடக அரசு - "தன்னிடம் போதுமான அளவு தண்ணீர் இல்லை என்பதுடன் நமது மாநிலப் பகுதி விவசாயிகள் தண்ணீரைத் திறந்துவிட வேண்டாம் எனக் கோரிப் போராடுகின்றனர்" -



மேட்டூர் அணையைப் பார்வையிடும் அதிகாரிகள்

எனச் சாட்டுக்கள் கூறிய வண்ணம் இந்திய உச்சநீதிமன்ற உத்தரவினை அவமானப்படுத்தியமை அறிந்ததே.

இதனையடுத்து, காவிரிநீர் பகிர்வு விடயத்தில் கர்நாடக அரசு உச்ச நீதிமன்றத்தினை அவமதித்துள்ளதாக, தமிழ்நாடு அரசு வழக்குத் தாக்கல் செய்ததையடுத்து நேற்றுமுன்தினம் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ஹிர்பால், மற்றும் நீதிபதிகள் சபர்வால், அரிஜித் பசாயத் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

மேற்படி வழக்கில் கர்நாடக அரசின் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி அனில்திவான் - கர்நாடக அரசு தங்களால் முடிந்த அளவு தண்ணீரை தமிழ்நாட்டுக்கு திறந்து விட்டது என்றும், ஆனால் விவசாயி ஒருவர் தற்கொலை செய்து கொண்டதைத் தொடர்ந்து கர்நாடக மாநிலத்தில் ஏற்பட்ட பதட்டமான சூழ்நிலை காரணமாகவே உச்சநீதிமன்ற உத்தரவினை நிறைவேற்ற முடியவில்லையே தவிர, வேண்டுமென்றே நீதிமன்ற உத்தரவை கர்நாடக அரசு புறக்கணிக்கவில்லை என சட்டத்தரணி அனில்திவான் வாதிட்டார்.

வழக்கினை விசாரணை செய்த நீதிபதிகள் - எம்.எஸ்.கிருஷ்ணா தலைமையிலான கர்நாடக அரசு மக்களின் உணர்வைத் தூண்டிவிட்டு, அவர்களைப் போராட்டத்தில் ஈடுபடுத்தி ஒரு பதற்றமான புறச்சூழலை உருவாக்கியமை மிகுந்த கண்டனத்திற்குரியது. இப்பதற்றமான சூழ்நிலையைக் காரணம் காட்டி நீதிமன்ற உத்தரவை உதாசீனம் செய்த கர்நாடக முதலமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவை நீதிபதிகள் கடுமையாகச் சாடியுள்ளனர்.

மேலும் சட்டம், ஒழுங்கை நிலை நாட்ட வேண்டிய கடமைப்பாடுடைய, மக்களால் தேர்தெடுக்கப்பட்ட ஒரு அரசானது - உச்சநீதிமன்ற உத்தரவை மீறியதோடு, தன் கடமையிலிருந்து தவறியயுள்ளது மிகவும் வேதனைக் குரியது. இவ்வாறான அரசு உடனடியாக பதவிவிலக வேண்டும் என நீதிபதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். அத்தோடு நீதிமன்ற உத்தரவை செயற்படுத்தாமைக்கு மேற்படி மாநிலத்தில் உருவாகிய பதட்ட நிலையைக் காரணம் காட்டுவதனை உடனடியாக நிறுத்த வேண்டும். காவிரி விவகாரத்தின் மூலம் அரசியல் இலாபம் தேடும் நிலைப்பாட்டை முதலமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா உடனடியாகக் கைவிட வேண்டும் எனவும் கூறியுள்ளனர்.

**தொகுப்பு:- அநபாயன்**

நீதிமன்ற உத்தரவை நிலை நாட்ட இயலாத சந்தர்ப்பத்தில் மாநில அரசு மீண்டும் நீதிமன்றத்தை நாடி, மேற்படி விவகாரத்திற்கான மாற்று நடவடிக்கைகள் பற்றி, நீதிமன்றத்துடன் ஆலோசனை நடத்தியிருக்கவேண்டும். ஆனால் அதனை விடுத்து நீதிமன்றத்தைத் திசை திருப்பும் முயற்சியாக பாதயாத்திரைகளை ஒழுங்கு செய்தும் அனைத்துக் கட்சிகளையும் கூட்டி "என்ன விளைவுகள் ஏற்பட்டாலும் தமிழகத்திற்கு தண்ணீர் திறக்கக் கூடாது"- என தீர்மானம் நிறைவேறிய செயல்கள் எல்லாம் அரசியல் சட்டத்தின் 144ஆவது சரத்தினை அவமதிப்பதன் மூலம் நீதிமன்றத்தை அவமதிப்பதாகவே இவ் உச்ச நீதிமன்றம் கருதுவதாக நீதிபதிகள் கூறியுள்ளனர். இவ்வாறு நீதிமன்றத்



பாதயாத்திரை செல்லும் கிருஷ்ணா

தினை அவமதித்தது தொடர்பாக நாளை திங்கட்கிழமை உச்சநீதிமன்றம் தனது இறுதித்தீர்ப்பினை வழங்கும் எனவும் நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் நீதிபதிகள், காவிரி விவகாரத்தில் உச்சநீதிமன்றத்தின் உத்தரவை கர்நாடக அரசு அமுல் செய்வதை உறுதிப்படுத்த வேண்டியது மத்திய அரசின் கடமை. இந்த விவகாரத்தில் மத்திய அரசு தலையிடாதது ஏன்? என நீதிபதிகள் கேள்வி எழுப்பியமையைத் தொடர்ந்து மத்திய அரசின் சார்பில் ஆஜரான இந்திய சட்டமா அதிபர் பதிலளிக்கையில் - இவ்விவகாரத்தில் மத்திய அரசு தன்னிச்சையாக நடவடிக்கை எடுப்பது சிரமமான காரியம் ஆகும். ஆனால் நீதிமன்றம் மத்திய அரசிற்கு உத்தரவு இடுமாயின் அவ்வுத்தரவின் பிரகாரம் மத்திய அரசு செயற்படும் எனக் கூறியுள்ளார்.

இந்நிலையில் - உச்ச நீதிமன்றத்தின் கண்டனம் மற்றும் நாளை திங்கட்கிழமை நீதிமன்ற அவமதிப்பு தொடர்பான வழக்கின் தீர்ப்பு வரவிருக்கின்ற வேளையில் - கர்நாடக முதல்வர் எஸ்.எம்.கிருஷ்ணா, பெங்களூரில் நேற்று நடைபெறவிருந்த மந்திரிசபைக் கூட்டத்தை இறுதி நேரத்தில் கைவிட்டு, டெல்கியில் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியை ஒரு மணிநேரம் சந்தித்து பேசியுள்ளார். அதன் பின்னர் டெல்கியிலுள்ள 'கர்நாடக இல்லத்திற்கு' திரும்பிய எஸ்.எம். கிருஷ்ணா பத்திரிகையாளர்கள் கேட்ட எந்தக் கேள்விகளுக்கும் பதிலளிக்க மறுத்து விட்டதுடன், சோனியா காந்தியுடன் பொதுவாக நாட்டுநடப்பு மற்றும் அரசியல் நிலவரம் பற்றியே பேசியதாக தெரிவித்துள்ளார்.

எஸ்.எம்.கிருஷ்ணா கருத்து வெளியிட மறுத்தபோதும் அவர் சோனியாகாந்தியுடன் பேசிய விடயங்கள் வெளியில் கசிந்துள்ளன.

உச்சநீதிமன்றம் நாளை திங்கட்கிழமை அளிக்கப்போகும் தீர்ப்பு கர்நாடக மாநில அரசிற்கு பாதகமாக அமையும் பட்சத்தில் முதலமைச்சர் பதவியை இராஜினாமா செய்யப் போவதாகவும், அதன் மூலம் எழும் மக்களின் அனுதாப அலையைப் பெற்று தேர்தலில் பெரும்பான்மையுடன் வென்று மீண்டும் ஆட்சியை கைப்பற்றப் போவதாகவும் சோனியாவிடம் கூறியுள்ளார். ஆனால் அதற்கு சோனியாகாந்தி, இன்னமும் குறைந்தது இரண்டு ஆண்டுகள் ஆட்சிக்காலம் இருப்பதால் இப்போது ராஜினாமாத் தேவையில்லை. இன்னொரு தேர்தலுக்கு முகங்கொடுக்க வேண்டியதில்லை எனக் கூறியதாக தெரியவருகின்றது.

இதேவேளை, பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, பதவியேற்று மூன்று ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய போது - "நாம் விடுதலை பெற்ற பொழுது, நதிகளை இணைக்கும் திட்டத்தை தொடங்கியிருந்தால் காவிரிப் பிரச்சினை போன்ற நதி நீர்ப்பங்கீட்டுச் சிக்கல்கள் இப்போது உருவாகியிருக்காது. சுதந்திரம் பெற்றது முதல் இந்தியாவை நீண்ட காலம் ஆட்சிபுரிந்த காங்கிரஸ் அரசுகள் நதிகளை இணைப்பது குறித்து எந்த திட்டத்தையும் வகுக்கவில்லை. நதிகள் இணைப்பது குறித்து அவர்கள் யோசிக்கவேயில்லை. அப்போது நதிகளை இணைக்க முயற்சி மேற்கொண்டிருந்தால் விவசாயிகள் இன்றைக்கு பருவமழையை மட்டும் நம்பியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது" எனவும் பிரதமர் தெரிவித்தார்.



பெங்களூரில் அனைத்துக் கட்சிக் கூட்டம்

# அவர் அவரேதான்!

## விளையாட்டு அரங்கம்



குத்துச் சண்டை உலகில் அமெரிக்க வீரர் முகமட் அலி என்ற பெயர் உலகப் பிரசித்தம். இதற்கான காரணங்கள் இரண்டு. ஒன்று - அக்கால கட்டத்தில் குத்துச்சண்டை உலகில் சகல சாதனைகளையும் புரிந்தவர். அடுத்தது வியட்னாமில் அமெரிக்கப் படையின் ஒரு அங்கத்தவராகச் சென்று வியட்னாமிய மக்களைக் கொன்றுகுவிக்க மறுத்தவர். இதனால் அவரது உலக சாம்பியன் பட்டம் பறிக்கப்பட்டது. மற்றும் பல்வேறு மன உளைச்சல்களுக்கு உள்ளாகியது என்பனவெல்லாம் ஒரு துன்பக் கதையாகத் தொடர்ந்தன. இவற்றின் தொடர்ச்சியாகவே காசியஸ் கிளே என்ற பெயருடன் இருந்தவர் முகமட் அலியாகவும் மாறினார். ஆனால் மீண்டும் குத்துச்சண்டை உலகில் முடிசூடா மன்னனாகியதும், **THE GREATEST** என்ற வார்த்தை என்றாலே அது முகமட் அலியையே குறிக்கும் என்பதும் வரலாறு. இன்று முகமட் அலிக்கு வயது 60. நீண்ட காலமாக, ஏறத்தாழ இருபது வருடங்களாக பார்க்கின்ஸன் எனும் நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் இவர், அண்மையில் பார்க்கின்ஸன் நோய் ஆய்வுக்கான நிதி திரட்டல் நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டார். இந்நிகழ்ச்சி கனடாவின் ரொரான்டோ நகரில் கனடிய உதைபந்தாட்ட லீக் ஆட்டம் ஒன்றின் இடையில் நடைபெற்றது. முகமட் அலியைக் கண்ட 25,000 மக்கள் 'அலி, அலி' என்று பெரும் ஆர்வத்துடன் குரலெழுப்பி வரவேற்றனர். இந்த நிகழ்வில் கூடிய பிரமுகர்களின் பெயர்ப்பட்டியல் பிரமிக்க வைக்கும். குத்துச் சண்டைப் போட்டிகளில் சிறப்புமிக்க வெற்றிகளைக்கண்ட லரி கோம்ஸ், இவாண்டர் ஹொலிபீல்ட், லெனொக்ஸ் லூயிஸ் ஆகியோரும் அங்கிருந்தனர்.

உண்மையில் முகமட் அலி தனக்குத் தானே சூடிக்கொண்ட **GREATEST** என்ற பட்டம் மிகப் பொருத்தமாகவே, குத்துச் சண்டை ரசிகர்களால் மட்டுமல்ல பல்துறை விளையாட்டு ஆர்வலர்களால் அங்கீகரிக்கப்பட்டது. இந்த நன்நோக்கு நிகழ்ச்சியில்



லூயி...டன் முகமட் அலி

தனது பெருமிதம்மிக்க பட்டத்தை தானாக முன்வந்து மகிழ்ச்சியுடன் இன்னொருவருக்குச் சூட்டியுள்ளார் முகமட் அலி.



அவர்தான் கடந்த ஜுன் மாதம் இன்னொரு குத்துச்சண்டை வீரான மைக் டைசனைத் தோற்கடித்த அதிபாரக் குத்துச்சண்டை சாம்பியன் லெனொக்ஸ் லூயிஸ். தான் மிக மகிழ்ச்சியாகவே மிகப் பொருத்தமானவருக்கு **THE GREATEST** என்கிற

**- சரண்யன் -**

எனது பட்டத்தைத் தாரைவார்க்கிறேன் என்றார். இவரது மகள் லைலாவும் ஒரு குத்துச்சண்டை வீராங்கனை என்பது குறிப்பிடத்தக்கது. அவரது பார்க்கின்ஸன் நோய்க்குக் காரணமே களத்தில் அவர் வாங்கிய குத்துக்கள்தான் என்பது துக்ககரமான செய்திதான். ஆனால் அவர் என்னதான் தன்பட்டத்தைத் துறக்கத் துணிந்தாலும் குத்துச்சண்டை உலகில் முகமட் அலிதான் **THE GREATEST.**

---

# அமைதியாக அடித்தளமிடும் தமயந்தி தர்ஷா



புசான் நகரில் நடந்து முடிந்த 2002 ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 400m ஓட்டத்தில் தங்கப் பதக்கம் வென்றவர் தமயந்தி தர்ஷா.

இவர் சுசந்திகா அளவிற்குப் பேசப்படுபவர் அல்ல என்றாலும் இவரது திறமை எவரது திறமைக்கும் குறைந்ததல்ல என்பது ஒரு நிதர்சனம். 400m ஓட்டப் போட்டியில் குறித்தகாலம் வரை சாதனையைத் தக்க வைத்திருந்தவர் சீன வீராங்கனையாகிய யுஜின் மா என்பவராவார். இந்த சாதனையை முறியடித்தவர் தமயந்தி தர்ஷா ஆவார். ஜப்பானின் ஹிரோஷிமா நகரத்தில் 1994ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தச் சாதனையை தமயந்தி தர்ஷா புரிந்தார். அதாவது இன்றைக்கு எட்டு வருடங்களுக்கு முன்பு. இதனைத் தொடர்ந்து 1998இல் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கம் வென்றவர் 400m ஓட்டப் போட்டியில் தமயந்தி தர்ஷாவேதான். ஆனால் தனது சாதனை இலக்கை அவரால் முறியடிக்க முடியவில்லை. 2002 இல் புசானில் தன் சாதனை நேரத்தைத் தானே முறியடித்துத் தங்கம் வென்றார் தமயந்தி தர்ஷா. 1994இல் ஹிரோஷிமா நகரில் நடைபெற்ற போட்டிகளில் 400m ஓட்டத்தில் தங்கம் வென்றவர். 200m ஓட்டத்தில் வெண்கலப்பதக்கம் வென்றார்.

இதனைத் தொடர்ந்து 1998 இல் பாங்கொககில் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 400m,

**- பிரகாசன் -**



200m இரு நிகழ்ச்சிகளிலும் தங்கப்பதக்கங்களை வென்றவர் தர்ஷா. ஆனால் கால அட்டவணை சாதகமாக அமையாததால் புசான் - 2002 ஆசிய விளையாட்டுக்களில் 200m ஓட்டத்தில் பங்குகொள்ள இயலாமல் போயிற்று.

இங்கு தமயந்தி தர்ஷா தொடர்ச்சியாகப் பதக்கங்கள் பெற்று வருவது அவதானிக்கத்தக்கது. மேலும் 400m, 200m இரண்டு நிகழ்வுகளிலும் தமயந்தி தர்ஷாவின் சாதனை நேரங்களே முதன்மை நிலையில் இருப்பதைக் குறிப்பிடலாம்.

தமயந்தி தர்ஷா 2004 ஏதென்ஸ் ஒலிம்பிக்ஸ் போட்டிகள் பற்றிக் கருத்துக்கூறும் போது, எனக்கு சகல தரப்பினதும் ஆதரவு கிடைக்குமாயின் என்னால் தங்கப் பதக்கம் வெல்ல இயலுமென்று மிகுந்த தன்னம்பிக்கையுடன் கூறுகின்றார். இக்கூற்றைப்பற்றி விளையாட்டுத்துறை விமர்சகர் ஒருவர் கருத்துக் கூறுகையில் இதுவரையிலும் ஏதாவது தரப்பாரின் ஆதரவு கிடைக்காமல் இருந்திருந்தால், ஒலிம்பிக் போட்டிகளை மனதில் கொண்டு அந்த ஆதரவு அலைகள் அனைத்தும் தர்ஷாவின் பக்கம் திரும்பவேண்டும் என்று கூறுகின்றார். மேலும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் அவர் தனித்தே தங்கம் வென்றார். ஆனால் ஒலிம்பிக் போட்டிகளில் அப்படி வெல்வது கடினம். ஆகவே விளையாட்டுத் துறை சார் அனைத்துத் தரப்பினரும் அவருக்கு உதவுவதென்பது நாட்டுக்கு உதவுவதாகும் என்று கூறுகின்றார்.

தர்ஷா கருத்துக் கூறுகையில், 50 செக்கன்களுக்குள் 400m ஓட்டத்தை தன்னால் ஓட முடியும் என



தமயந்தி தர்ஷா

கிறார். (ஆசிய சாதனை நேரம் 51.13 செ.) இது ஒலிம்பிக் சாதனை நேரத்தை அண்டியதென்பதுடன் சிட்னி ஒலிம்பிக்கின் 400m ஓட்டத்தில் தங்கம் வென்ற அவுஸ்திரேலியாவின் காதி பிறீமன் தன்னை விட நான்கு வயது மூத்தவரென்றும் சாதக நிலைமைகளை எடுத்துக்கூறுகிறார். இவற்றைப் பார்க்கும் போது தமயந்தி தர்ஷா ஒலிம்பிக் 400m ஓட்டத்தினை தனது இலக்காகக் கொண்டிருப்பது தெரிகிறது. அவருக்குரிய சகல வாய்ப்புகளும் வழங்கப்படுமாக இருந்தால் ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் தர்ஷா பெரும் சாதனை புரிவதைக் காணக்கூடியதாக இருக்கும் என்று நம்பலாம்.



# படிப்படியான வளர்ச்சி இலக்குத் தெளிவானது!



வினோஜா

எமது சிறார்களின் விளையாட்டுத் திறன் விருத்திக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுப்பதென்ற வகையில் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்துகொண்டு திறமையைக் காட்டிய பாடசாலைச் சிறார்களை சந்திக்க முயன்றோம். எமக்கு முதலில் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது - யா/கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த செல்வி எழில்மோகன் வினோஜாவாகும்.

1987 இல் பிறந்த இவர், 2003 இல் க.பொ. த. சா/த பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவி. இவரது விளையாட்டுத் திறமை யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் முதன் முதலில் வெளிவருகின்றது. நல்லூர் கோட்டமட்டப் போட்டியில் நின்று நீளம் பாய்தல், பந்து எறிதல், 50 மீற்றர் ஓட்டம் மூன்றிலும் முதலிடம் பெற்றுக் கொள்கின்றார். இதன் பின்னர் இடப் பெயர்வுக் காலகட்டம் கடந்து 1998 இல் யா/கொக்குவில் இந்துவில் ஆண்டு 6 மாணவியாக தன் விளையாட்டுத் திறமைகளை வெளிக்கொணர முயற்சிக்கின்றார்.

2000 ஆம் ஆண்டில் பதினைந்து வயதிற்குட்பட்ட வீராங்கனையாக தன் முதன்மையை இவர் நிரூபித்த மையைக் காண்கின்றோம். இவர் ஒரு சகலதுறை விளையாட்டு வீராங்கனை என்ற வகையில் தடகளப் போட்டிகளில் 100m, 200m, நீளம் பாய்தல் நிகழ்வுகளிலும், பெரும் விளையாட்டுக்களான வலைப்பந்தாட்டம், கூடைப் பந்தாட்டம் நிகழ்வுகளிலும் சோபிக்க ஆரம்பிக்கின்றார். இதன் பிரதிவிளைவாக 2001 இல் குறித்த மூன்று தடகள நிகழ்வுகளிலும் பாடசாலை மட்டம், கோட்டமட்டம், வலயமட்டம் ஆகிய நிலைகளில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொள்கின்றார். தொடர்ந்து வந்த மாவட்ட நிலையில் - மற்றைய இரண்டு நிகழ்வுகளிலும் 2ஆம், 3ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டு நீளம் பாய்தலில் முதலிடம் பெறுகிறார். மாவட்ட நிலையில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெறும் போட்டியாளர் மாகாண மட்டத்தில் பங்குகொள்ளத் தகுதியுடையோர் என்ற வகையில் மாகாண மட்டத்தில் நீளம் பாய்தலில் 2ஆம் இடம்பெற்று அகில இலங்கை ரீதியில் தேசிய மட்டப்போட்டிகளில் பங்குகொண்டவராகின்றார்.

இதேவருடம் கொக்குவில் இந்துவின் 15 வயதுக் குட்பட்ட வட - கிழக்கு மாகாண மட்டத்திற்குச் சென்ற அணியில் வினோஜாவும் ஒரு பிரதான வீராங்கனை. அதேவேளை - இதே காலப்பகுதியில் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சம்மேளனம் நடத்திய போட்டிகளில் கொக்குவில் இந்து 17 வயதிற்குட்பட்ட பிரிவில் முதலிடம்பெற்றது. இந்த அணியின் தலைவியாகத் திகழ்ந்தவர் 15 வயதிற்குட்பட்ட பிரிவைச் சார்ந்த வினோஜா என்பது விசேடமான ஒரு செய்தி. அந்தச் சுற்றுப்போட்டியின் **PLAYER OF THE SERIES** உம் வினோஜாவே. 2002 இன் சிறந்த கூடைப்பந்தாட்ட வீராங்கனை. சிறப்பாக **KHC** இன் **COLOURS GIRLS** 2002 இல் இவர் 17 வயதுப் பிரிவில் **JUNIOR** தரத்தில் இருக்கிறார். பாடசாலை மட்டத்தில் தனது விருப்பத்திற்குரிய 3 தடகள நிகழ்ச்சிகளிலும் முதலிடம் பெற்றுக்கொள்கின்றார். இந்த முதன்மை நிலைகளின் மூலம் ஏறத்தாழ 20 வருடங்களுக்கு முன் ஏற்படுத்தப்பட்ட பாடசாலைச் சாதனைகள் முறியடிக்கப் பட்டமையை அறிந்துகொள்ள முடிந்தது. தொடர்ந்து இவ்வருட வலய மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் - நீளம் பாய்தலில் முதலாமிடம் பெற்றுக்கொள்கின்றார். இவ்வருடம் 17 வயதிற்குட்பட்ட வீராங்கனையாக இருக்கும் வினோஜா கல்லூரியின் 21 வயதிற்குட்பட்ட கூடைப்பந்தாட்ட அணியின் ஒரு அங்கத்தவர். ஹற்றன் நேஷனல் வங்கி நடாத்திய சுற்றுப்போட்டியில் கொக்குவில் இந்து 2 ஆம் இடம்பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**— நிர்மலன் —**

மிகச் சிறிய வயதில் இவர் காட்டும் திறமை எதிர் காலத்தில் எமக்கு சாதனை படைக்கும் வீராங்கனை யொருவர் கிடைக்கப் போகிறார் என்பதை உறுதிபடக் கூற வைக்கின்றது.

இவரது முன்னேற்றத்தின் ஒரு படிக்கல்லாக இவரது தந்தையின் திட்டமிட்ட செயற்பாடு அமைவதைக் காணமுடிந்தாலும், தந்தையும் மகளும் ஒரு விடயத்தில் ஒருமித்த கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். மரபுவழி வந்த முறைசார் கல்வி நிறுவனமான கொக்குவில் இந்துவே இச்சிறுமியின் திறமைகளை வெளிக் கொணர்ந்தது என்பதையும் - அந்த நிறுவனம் எனும் பலமான அத்திவாரத்தில் நின்றே தன்னால் ஓரளவில் பிரகாசிக்க முடிகிறது என்கிறார் உண்மையான உள்ளத்துடன் வினோஜா.

தன் முன்னேற்றத்தின் பெரும்பங்கு கொள்ளும் அதிபர் பொ. கமலநாதன், விளையாட்டுப் பொறுப்பாசிரியர்கள் திருமதி சி.குணரத்தினம், ச.உமாசுதன் மற்றும் வகுப்பாசிரியர்கள், நண்பிகள் என்று பட்டியலிடும் இவர், இவர்கள் பற்றிக் கட்டாயம் குறிப்பிட்டேயாக வேண்டும் என்றும் கட்டளையிடுகின்றார். தொடர்ந்து வலைப் பந்தாட்ட பயிற்றுநர்கள் செல்வி ஜெயதர்சினி, செல்வி ஆனந்தி, கூடைப்பந்தாட்ட பயிற்றுநர் ஷாந்திகரன் ஆகியோரையும் மற்றும் திருமதி ரூப சிங்கம், இளம்பிறையன், தடகளப் போட்டிகளில் நிறைய வழி காட்டிய செ.ரமணன், செல்வி மிதுலா மற்றும் **kccc** கழகத்தைச் சார்ந்த ஆ.சத்திய மூர்த்தி போன்றோரையும் நன்றியுடன் நினைவு படுத்துகிறார் வினோஜா.





இங்கு இன்னொன்றையும் குறிப்பிடும்படி வினோஜா கேட்டுக் கொண்டார். **kccc** கழகம் அதன் அங்கத்தவர்கள் அனைவரும் தனது விளையாட்டுத் திறமையை செழுமைப்படுத்த நிறையவே பங்காற்றுவதையும், சந்தர்ப்பம் வழங்குவதையும் இந்த வளரும் நட்சத்திரம் நினைவுபடுத்துகின்றார்.

16 வயதிலேயே இவர் பெற்றுள்ள சான்றிதழ்களும், வெற்றிக் கிண்ணங்களும் ஏராளமானவையாக இருக்கின்றன. வினோஜா நிறைந்த வீச்சுக் கொண்டவர். இவர் சரியானவர்களாலும் இனங்காணப்பட்டுள்ளார். இவற்றுடன் சேர்ந்து நவீன வசதிகளும் வாய்ப்புக்களும் இவருக்கு கிடைக்குமாயின், முதல் கட்டமாக தேசிய மட்டப் பாடசாலை தடகள விளையாட்டுக்களில் முதல் மூன்று இடங்களில் ஓரிடத்தைப் பெற்றுத் தருவார் என்ற நம்பிக்கையே தோன்றுகின்றது. அப்படியொரு **BREAK** ஏற்படுமாயின் வினோஜாவின் சாதனைகள் மிகத்தூரம் பரந்து செல்லும் வாய்ப்பும் உள்ளது என்பது தெள்ளெனப்புரிகின்றது. அவருக்கு விளையாட்டரங்கின் வாழ்த்துக்கள்.

☆

# பலஸ்தீனமும் உதைபந்தாட்டமும்



**FIFA** இன் உதைப்பந்தாட்டத் தரப்படுத்தலில் 203 நாடுகளில் பலஸ்தீனத்தின் இடம் 151 ஆகும். இதுவல்ல முக்கியம். சிறப்பாக கருத்தில் கொள்ளவேண்டியது 1998 இல் பலஸ்தீனத்தை **FIFA** அங்கீகரித்துள்ளது என்பதாகும். பலஸ்தீனத்தின் அரசியல் நிலைமைகளைப் புரிந்து கொள்பவர்கள் அவர்கள் அரசியல் ரீதியிலும் விளையாட்டுத் துறையிலும் பெற்றுள்ள அங்கீகாரங்களின் மகத்துவத்தைப் புரிந்துகொள்வார்கள்.

இது ஒருபுறமிருக்க, இப்போது கவனிக்க வேண்டிய விடயம் பலஸ்தீனம் தன்னை எந்த வகையில் உதைபந்தாட்ட உலகில் தடம்பதித்துக் கொள்ள முனைகிறது என்பதாகும்.



அதாவது தென் அமெரிக்காவில் இருந்து பலஸ்தீனிய இரத்தம் ஓடும் வீரர்களைத் தேடி நிற்கிறது பலஸ்தீனம்.

இதற்கு உருக் கொடுப்பவர் பலஸ்தீனிய உதைபந்தாட்ட பயிற்சியாளர் நிக்கலஸ் ஹட்வேயராவார். இவர் பலஸ்தீனப் பெற்றோருக்குப் பிறந்த சிலி நாட்டவராவார். பாலஸ்தீன உதைபந்தாட்டத்தின் தரத்தை உயர்த்த வேண்டும். அதற்காக தென் அமெரிக்காவில் வாழும் பலஸ்தீன வம்சாவழி வீரர்களைத் தேடுகின்றேன் என்கிறார் அவர். தென் அமெரிக்காவில் இலட்சக்கணக்கான பலஸ்தீன பரம்பரையினர் வாழ்ந்து வருகின்றார்கள். சிலி நாட்டில் மட்டும் 300,000 பலஸ்தீனக் கலப்புடையோர் வாழ்கின்றார்கள்.

கடந்த உலகக்கிண்ணப் போட்டித் தகுதிகாண் போட்டிகளில் ஆசிய பிராந்திய முதற்சுற்றிலேயே ஆறு போட்டிகளில் ஏழு புள்ளிகள் பெற்று தகுதியிழந்தது பலஸ்தீனம். ஆனால் மேற்சொன்ன முறையில் உதை பந்தாட்ட வீரர்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தால் பலஸ்தீன உதைபந்தாட்ட அணியின் பலம் வெகுவாக அதிகரிக்கும். ஏனெனில் சிறந்த தரம் வாய்ந்த அரபுலக உதைபந்தாட்ட அணிகள் சூழவுள்ளதால் அவர்களின் ஆதரவும் பலஸ்தீனத்துக்குக் கிடைக்கும். எனினும் பலஸ்தீனம் எனும் நாட்டுக்காக விளையாடும் தென் அமெரிக்க நாடுகளின் வீரர்கள், அதன் பின்னர் தமது நாட்டுக்காக விளையாடும் தகுதியை இழந்து விடுவார்கள் என்று அஞ்சுகிறார்கள். இதையே **FIFA** உம் கூறுகிறது. இது நியாயமான அச்சமும் கூட.

**— தெய்வா —**

தென் அமெரிக்க நாடுகள் உலக உதைபந்தாட்ட அரங்கில் கொடிகட்டிப் பறப்பவை. எனவே ஒரு வீரர் எதைத் தெரிவு செய்வார்? பலஸ்தீனத்துக்கு விளையாடுவதையா? அல்லது தனது தாய் நாட்டுக்கு விளையாடுவதையா? ஆர்ஜென்ரீனாவில், சிலியில் பல முன்னணிக் கழகங்களில் பலஸ்தீனப் பரம்பரையினர் முன்னணி வீரர்களாக விளையாடிக்கொண்டு இருக்கிறார்கள். இவர்களை வென்றெடுப்பது எவ்வாறு?



இதேவேளை, பெரு, ஹொண்டுராஸ், மெக்சிக்கோ முதலிய நாடுகளிலும் பலஸ்தீன பரம்பரையினரைத் தேடி ஹட்வே புறப்பட்டு விட்டார். இந்த முயற்சிகள் வெற்றி பெறுமாயின் பலஸ்தீனம் இன்னொரு உதைபந்தாட்டச் சக்தியாக வேகமாக வளருவதைத் தடைசெய்ய யாராலும் இயலாது.



நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*"அறிவு அற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்*
*உள்அழிக்கல் ஆகா அரண்"*

*-திருக்குறள்*

# நமது நோக்கு

## காலத்தின் தேவை!

யாழ்.பல்கலைக்கழகத்தில்-சட்ட பீடம் ஒன்றை அமைப்பதற்கான முன்நகர்வுகள் வேகம் பெற்று வருவதனை - மிகுந்த மகிழ்ச்சியுடன் தமிழ் மக்கள் வரவேற்கின்றனர்.

தமிழர் தாயகப் பகுதியில் அமையவுள்ள முதலாவது சட்டபீடம் என்ற வகையிலும் - காலத்தின் அவசியத் தேவை என்ற வகையிலும், சட்டபீடத்தை இங்கு அமைப்பதற்கான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பும் ஆதரவும் தரவேண்டியது தமிழர்கள் எல்லோரதும் வரலாற்றுக் கடமையாகும்.

இது வரை காலமும் இலங்கையில் - கொழும்புப் பல்கலைக்கழகத்தில் மட்டுமே இயங்கி வந்த சட்ட பீடத்திற்கு அடுத்ததாக - இரண்டாவதாக ஒரு சட்டபீடம் அமைக்கும் வாய்ப்பை, யாழ்.பல்கலைக் கழகம் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் சட்டபீடம் அமைக்கப் படுவதானது பல வகையிலும் முக்கியத்துவமுடைய தாகின்றது.

தெற்குப் பல்கலைக்கழகங்களில் - சட்டக்கல்வியைப் பயில்வதற்கு தமிழ் மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டு வந்தாலும், அது மட்டுப்படுத்தப் பட்ட அனுமதியாகவே இருந்து வந்துள்ளது. இந்த நிலையில் - அதிகளவில் தமிழ் மாணவர்களை சட்டக் கல்விக்கு உள்வாங்கக் கூடிய ஒரு நிலையை புதிய சட்டபீடம் கொண்டிருக்கும்.

இதனால்- கொழும்புப் பல்கலைக்கழகத்திலமைந்த சட்ட பீடத்தில் கற்ற /கற்றுவரும் தமிழ் மாணவர்களின் தொகையை விட, எதிர்காலத்தில்- தமிழினத்தில் அதிகளவு சட்டவாளர்களும், சட்டக் கல்வியியலாளர்களும் தோன்றுவதானது - எமது சமூகத்தின் சட்ட அறிவுசார் புலமைத்துவத்தையும், சட்டம் பற்றிய விழிப்புணர்வையும் அதிகரிக்கச் செய்யும். இது ஒரு ஆரோக்கியமான சமூகச் சூழலுக்கு இட்டுச் செல்லும். சட்ட அறிவுசார் சமூகம் உருவாக வழி சமைக்கப்படும்.

சட்டக்கல்வி என்பது தொழில் சார் விருத்திக்கு மட்டுமல்லாது, அறிவுத்தேடலுக்கான கற்றலுக்கும் வழிவகுக்கக்கூடியதான வாய்ப்பை- புதிய சட்டபீடம் வழங்கக்கூடியதாக இருக்கும்.

யாழ்.பல்கலைக்கழகத்தைப் பொறுத்த வரையில்-ஏனைய துறைகள், சட்டபீடத்தின் வளத்தையும் அறிவையும் தமது துறைகளிலும் பயன்படுத்த இனி வாய்ப்புக் கிடைக்கும். உதாரணமாக-முகாமைத்துவப் படிப்புக்களிலும், சமூகவியல் மற்றும் அரசியல் துறைகளிலும், மருத்துவத்துறையிலும்- சட்டபீடத்தின் துறைசார் உதவியும், ஒத்துழைப்பும்- முக்கிய பகுதித் தேவையை நிறைவு செய்ய உதவக் கூடியதாக இருக்கும்.

எமது சமூகத்தைப் பொறுத்தவரை - இன ஒடுக்கு முறையாலும், இராணுவ நெருக்குதல்களாலும், மனித உரிமை மீறல்களாலும் மிகப்பெரும் பாதிப்பைச் சந்தித்த/சந்தித்து வரும் சமூகம் என்ற ரீதியில்- எமக்கான சட்ட வழிமுறைகளைத் தேசியரீதியிலும், சர்வதேசரீதியிலும் பலமுடனும், அறிவுசார் பின்புலத்துடனும் முன்னெடுத்துச் செல்லப் புதிய சட்டபீடம் வழியமைத்துத் தரும்,

எல்லாவற்றுக்கும் மேலாக-எம்மை நாமே ஆளும் தன்னாட்சிக்கான தயார்படுத்தலில் - நீதித்துறையின் வளத்தைப் பெருக்கவும், விருத்தி செய்யவும்-ஏற்கனவே செய்யப்பட்டுள்ள தயார்படுத்தலுக்கு, [illegible]கப்பெருந்துணையான, பலமான அடித்தளமொன்றை அமைக்க புதிய சட்டபீடம் வழியமைக்க முடியும்.

தமிழ்மக்களுக்கேயான - தன்னாட்சி, சுயநிர்ணயம், தாயகம் என்பவற்றை வலியுத்தும் எமக்கான சட்டங்கள் பற்றிய ஆய்வுகளுக்கும் - தேச வழமைச் சட்டத்தினதும் முக்குவச்சட்டத்தினதும் நல்ல கூறுகளை, எமக்கான வரலாற்றாதாரமாகக் கொள்ளவும், புதிய சட்டபீடத்தினூடாக முயற்சிகள் முன்னெடுக்கப்படவும் வாய்ப்புண்டு.

எனவே - யாழ்.பல்கலைக்கழகத்தின் புதிய சட்ட பீடத்தை விரைவாக ஆரம்பிக்கவும் அதனை வளர்ச்சயுறச் செய்யவும் - துறைசார் நிபுணத்துவம் பெற்றவர்களும், ஆர்வலர்களும், தமது பணிகளை வழங்க முன்வரவேண்டுமென தமிழினம் எதிர்பார்த்து நிற்கின்றது.

ஒரு பெரும் இலட்சியத்துக்கு அணிசேர்ப்பவர்களாக, அனைவரும் ஒருமுகத்துடன் புதிய சட்ட பீடத்தை வரவேற்போம்! வளம் சேர்ப்போம்!!.

ஏ ●

# புதிய அமைச்சர்கள் நியமனத்தை பிரதமர் ரணில் இடைநிறுத்தினார்!

## பத்திரிகைகளுக்கு தகவல் கசிந்ததால் கோபம்

(கொழும்பிலிருந்து அருள்)

இந்த வாரம் ஐந்து புதிய அமைச்சர்களை நியமிக்கும் திட்டத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இடைநிறுத்தி வைத்திருப்பதாகத் தெரியவருகிறது.

ஐந்து புதிய அமைச்சர்களை நியமிக்கும் திட்டம் குறித்த தகவல்கள் ஊடகங்களில் வெளியானதையடுத்தே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த முடிவை எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கேலிய ரம்புக்வெல, லக்ஷ்மன யாப்பா அபயவர்த்தன, ஹேமகுமார நாணயக்கார, லக்ஷ்மன் செனிவிரத்ன ஆகியோர் உட்பட ஐந்து ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களை அமைச்சர்களாக நியமிக்க அரசாங்கம் முடிவு செய்திருந்தது. இவர்களின் பெயர்ப்பட்டியல் ஜனாதிபதிக்கு அனுப்பவும் தயாராகியிருந்தது.

ஐ.தே.கவில் இருந்து பொ.ஐ.முன்னணிக்கு ஆதரவளிக்க முற்பட்ட இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை அமைச்சர்களாக நியமிப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டிருந்தார். இந்தச் செய்தி ஊடகங்களில் வெளியானதையடுத்தே ரணில், இவர்களை அமைச்சர்களாக நியமிக்கும் திட்டத்தைக் கைவிட்டுள்ளார்.

அத்துடன் இச்செய்தி ஊடகங்களுக்கு எப்படி வெளியானது என்பது குறித்தும் தனது கட்சி உயர் மட்டத்தினருடன் ரணில் ஆராய்ந்து வருவதாகவும் தெரியவருகின்றது.

கட்சியின் உயர் மட்டத்தினால் எடுக்கப்படுகின்ற முடிவுகள் ஊடகங்களுக்கு தெரிவது தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க கூடிய கவனம் எடுத்துள்ளார். இது தொடர்பாக இரண்டு சிரேஷ்ட அமைச்சர்களிடம் அவர் விளக்கம் கோரியிருப்பதாகவும் தெரியவருகின்றது.

# பிரமுக சேமிப்பு வங்கி நடவடிக்கைகளை இலங்கை மத்திய வங்கி தடைசெய்தது

(கொழும்பு)

பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறு மத்திய வங்கியின் நிதியியற் சபை உத்தரவிட்டிருக்கின்றது.

வங்கிச் சட்டங்களின் பிரமாணங்களுக்கமைய இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆகக் கூடுதலாக 60 நாட்கள் அமுலாகும் விதத்தில் இடைநிறுத்த உத்தரவு செல்லுபடியாகும் என்று மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் பிரமுக வங்கியின் விவகாரம் குறித்த உண்மை நிலைகளை கண்டறிவதற்கு மத்திய வங்கியின் மேற்பார்வைக் குழு விசாரணைகளை மேற்கொள்ளும் எனவும் அதன்பின்னர் இந்த வங்கி மீண்டும் இயங்க அனுமதிப்பதா இல்லையா என நிதியியற்சபை தீர்மானிக்கும் எனத் தெரியவருகின்றது.

பிரமுக வங்கியில் கணக்குகளை வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் மத்திய வங்கியின் ஆலோசனைகளைப் பெற்று அடுத்தகட்ட நடவடிக்கையில் ஈடுபடவேண்டும் என அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. குறித்த காலப்பகுதிகளில் பிரமுக வங்கிக் கணக்கு வழக்குகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படமாட்டாது எனவும் மத்திய வங்கி அறிவித்தல் விடுத்துள்ளதாக தெரியவருகின்றது.

## புன்னாலைக்கட்டுவனில் மருந்தகம் அமைக்க உதவிசெய்யுமாறு கோரிக்கை

### ஜயலத்துக்கு சனசமூக நிலையம் கடிதம்

(நமது நிருபர்)

மத்திய மருந்தகம் அமைப்பதற்குரிய நிதியுதவி அளியுங்கள் என்று புன்னாலைக்கட்டுவன் தெற்கு சனசமூக நிலையம் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

இந்தக் கிராமத்தில் இருக்கும் மத்திய மருந்தகத்தால் இந்தக் கிராம மக்களோடு அயற்கிராம மக்களும் பயனடைந்து வருகிறார்கள்.

துரதிர்ஷ்டவசமாக நீண்டகாலமாக தனியார் கட்டடத்தில் இயங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. சனசமூக நிலையம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க ஒரு நன்கொடையாளர் ரூபா 13 லட்சம் பெறுமதி கொண்ட நிலத்தை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

இந்த நிலத்தில் புதிய கட்டடம் அமைப்பதற்குரிய நிதியை தந்துதவுமாறு அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## படையினரால் எடுத்துச்செல்லப்படும் விளையாட்டரங்கக் கூரை!

(சரசாலை)

சாவகச்சேரி நகரசபையின் பொது விளையாட்டு மைதானத்தில் உள்ள அரங்கின் - கூரைத் தகடுகள், மரங்கள் என்பன படையினரால் அகற்றப்பட்டு கொண்டு செல்லப்படுகின்றன.

சாவகச்சேரியில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களின்போது எதுவித சேதமுமின்றித் தப்பிய இந்த அரங்குக் கட்டடக் கூரை - தற்போது படையினால் எடுத்துச் செல்லப்படுவது குறித்து மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். (34)

## அடிப்படை வசதிகளுடன் சாவல்கட்டு வீடமைப்புத் திட்டம்

(சுதுமலை)

சாவல்கட்டு கடற்றொழிலாளர் சுய உதவித் திட்டத்தின் கீழ் 100 வீடுகள் அமைக்கப்பட்டு, அவற்றிற்கான அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. அவ்வீடுகளுக்கேற்ற முறையில் வீதிகள் அமைக்கும் பணி பூர்த்தியடையும் நிலையை அடைந்துள்ளது. மேலும் மலசலகூட வசதி, நீர் வசதி, பொது மண்டபம், மின்சார வசதி முதலிய பொதுவேலைகள் பூர்த்தியாக்கப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (91)

## ஆதரவற்ற பெண்களுக்காக கருணை இல்லம் அமைப்பு

(வலி.வடக்கு)

அநாதரவான நிலையில் வாழும் பெண்களுக்கு வாழ்வளிக்கும் நோக்குடன் உரும்பராயில் 'கருணை இல்லம்' ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

உரும்பராய் சந்தியிலிருந்து சொற்ப தூரத்தில் பலாலி வீதியில் அமைக்கப்படும் இந்த இல்லத்திற்கு லண்டன் வாழ் தமிழர்கள் நிதியுதவி செய்துள்ளனர்.

சுமார் 10 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படும் இவ் இல்லம் விரைவில் வேலைகள் பூர்த்தியாகி திறந்து வைக்கப்பட உள்ளது.

இவ்வில்லம் திறந்து வைக்கப்பட்ட பின் சமூகத்தில் அநாதரவான நிலையில் பராமரிப்பு இன்றி வாழும் பெண்களுக்கு நல்வாழ்வு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (105)

## மருதங்கேணியில் வாரத்தில் இரு நாள்கள் இடம்பெயர் வைத்திய சேவை

(வடமராட்சி கிழக்கு)

மருதங்கேணி கிராமிய வைத்தியசாலைக்குப் பதிலாக நடமாடும் வைத்தியசேவையொன்று பருத்தித்துறை வைத்திய அதிகாரி தலைமையில், மருதங்கேணியில் தனியார் வீட்டில், வாரத்தில் இரண்டு நாட்கள் செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களில் நடைபெறுகிறது.

இரண்டு நாட்கள் நடைபெறும் நடமாடும் சேவை போதாது எனவும், வாரத்தில் ஐந்து நாட்களும் நடைபெறவேண்டுமெனவும் பொதுமக்கள் சார்பில் தெரிவிக்கப்படுகிறது. வடமராட்சி கிழக்கில் மீளக்குடியமர்ந்த 3000இற்கும் அதிகமான குடும்பங்கள் வாழ்வதால் கிழமையில் ஐந்து நாட்கள் வைத்தியசேவை இடம்பெறவேண்டுமென பொதுமக்கள் சார்பில் தெரிவிக்கப்படுகிறது. (17)

# நாகர்கோயில் வீதித் தடையை அகற்றி போக்குவரத்துக்கு உதவுங்கள்

## வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் அரச அதிபருக்கு மகஜர்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு மக்களின் கஷ்டங்களை நீக்கித் தருமாறு வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் யாழ். அரசாங்க அதிபரை மகஜர் மூலம் கேட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

எமது மக்கள் பல வருடங்களாக சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள். தற்போது சமாதானச் சூழ்நிலை ஏற்பட்டும் எங்கள் கஷ்டங்கள் தீர்ந்தபாடில்லை. நாகர்கோயிலில் இருக்கும் வீதித்தடையை நீக்கி மக்கள் போக்குவரத்துக்கான ஏற்பாடுகளை செய்துதரவும்.

நாகர்கோயில் கிழக்கு, மேற்கு, தெற்கு, அம்பன் வைத்திய சாலைப்பகுதி ஆகிய இடங்கள் இன்னும் மக்கள் மீளக் குடியமர்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. இந்த இடங்களில் மீளக்குடியமர்வதற்கும், வணக்கத் தலங்களான நாகர்கோயில் நாகதம்பிரான், கௌததந்துறை பிள்ளையார் கோயில், சவேரியார் ஆலயம் ஆகியவற்றில் நித்திய பூசைகள் நடத்துவதற்கும் ஆவன செய்துதருமாறு வேண்டுகிறோம்.

அம்பன் வைத்தியசாலையை சொந்த இடத்தில் இயங்க வைப்பதற்கும், நாகர்கோயில் மகாவித்தியாலயம், அமெரிக்கன் மிஷன் பாடசாலை ஆகியன சொந்த இடத்தில் இயங்க வைப்பதற்கும் ஆவன செய்துதருமாறு தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறோம் என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மகஜரின் பிரதிகள் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கும், யாழ். பாராளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுத பிள்ளைக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (17)

# நிரந்தர சமாதானத்திற்கான ஒருமித்த முயற்சியும் தென்னிலங்கையின் ஏட்டிக்குப் போட்டி அரசியலும்!

**தெற்குத் திசையினிலே......**

**கொழும்பிலிருந்து இந்திரஜித்**


சந்திரிகா

18ஆவது, 19ஆவது அரசியல் சீர்திருத்தங்கள் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தோல்வியைச் சந்தித்துள்ளன. பொ.ஐ.முவில் இருந்து ஒரு பிரிவினரை அழைத்து அதன்மூலம் அரசமைப்புச் சீர்த்திருத்தங்களை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிவிடலாம் என்ற ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் திட்டம் முழுமை பெறவில்லை.

இதற்கு அரசாங்கம் நம்பியிருந்த பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்களும் காரணமானவர்கள் எனக் குறிப்பிடலாம். முன்னதாக A.H.M.பௌஸி, ரிச்சர்ட் பத்திரன, தி.மு.ஜயரத்ன போன்றோர்களும் பின்னர் ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே உட்பட்ட குழுவினரும் அரசாங்கத்தில் இணையப் போவதாக அல்லது அரசாங்கத்தின் திட்டங்களுக்கு ஆதரவு வழங்கப்போவதாக அறிவித்திருந்தனர்.

எனினும் கட்சிக்குள் ஒழுங்கற்ற நடவடிக்கை காரணமாக நாடாளு


விமல் வீரவன்ச

மன்ற உறுப்பினர்கள் நிலை பறிபோகலாம் என்ற அச்சம் இவர்களின் நகர்வில் தாக்கத்தை கொண்டு வந்தது. 19ஆம் திருத்தச் சட்டத்தின் மனச்சாட்சியின்படி வாக்களித்தல் என்ற அம்சம் நாடாளுமன்றத்தில் 3இல் 2 பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டிருக்குமானால் இந்த பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களின் அரசாங்கத்தை நோக்கிய நகர்வு தீவிரப்பட்டிருக்கும்.

எனினும் தற்சமயம் அதற்கான வாய்ப்பே இல்லாமல் போயிருக்கிறது. இந்த நிலையில் 18ஆம், 19ஆம் அரசியலமைப்பு சீர்திருத்தங்களை உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் நிறைவேற்றமுடியுமா? என அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது. ஏற்கனவே அரசாங்கத் தரப்பு நீதியாளர்கள் இந்த உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகளை ஆராய்ந்துள்ளனர். அடுத்த வார முற்பகுதியில் அரசாங்கத்தின் முன்னிலைப் பிரிவினரே இதனைத் தீவிரமாக ஆராயவிருக்கின்றனர். பிரதம மந்திரியும் இது தொடர்பில் அரசு தீர்க்கமான முடிவை மேற்கொள்ளும் எனத் தெரிவித்திருக்கிறார்.

அரசாங்கம் ஒருபுறத்தில் எதிர்க்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணியின் சவால் நகர்வுகளைச் சமாளிக்க வேண்டிய நிலையில், மறுபுறத்தில் தமது கூட்டு முன்னணிக்குள் நிலவும் பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவர முடியாத நிலையில் இருந்து வருகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஒரு பிரிவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பகிஷகரிப்புப் போராட்டத்தை இதுவரை நிறுத்திக் கொள்ளவில்லை. இது ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கு மாத்திரமல்லாமல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவத்துக்கும் ஆபத்தைத் தோற்றுவித்திருக்கிறது. ரவூப் ஹக்கீம் இதுவரை மேற்கொண்டு வந்த சமாளிப்பு நிலைப்பாடு தோற்றுவிடும் ஆபத்து எழுந்திருக்கிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் இணங்கிக்கொண்டுள்ள இடைக்கால நிர்வாகம் மற்றும் ஏனைய விடயங்களில் பகிஷகரிப்பில் ஈடுபட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கு கேட்கும் தீவிரம் இன்னமும் தளரவில்லை. பிரமத மந்திரியின் வாக்குறுதியை அவர்கள் கோருகின்றனர். எனினும் சமாதான பேச்சுவார்த்தையின் சமதரப்பினரான தமிழீழ விடுதலைப் புலிகளை ஆலோசிக்காமல் பிரதம மந்திரியினால் எவ்வித வாக்குறுதியையும் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் ஏற்கனவே வடக்கு - கிழக்கு முஸ்லிம்களின் தனியான அலகு கோரிக்கைக்கு மாற்றுத் தீர்வை ஆலோசிக்கலாம் என அறிவித்திருக்கின்றனர். எனினும் அரசியல் மற்றும் பொருளாதாரரீதியில் முஸ்லிம்களின் சுயாட்சியை உறுதிப்படுத்தக்கூடிய மாற்றுத் தீர்வு என்ன என்பதை அரசாங்கம் முன்கூட்டியே அறிவிக்க வேண்டும் என பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோருகின்றனர்.

இவர்களுக்கு ஆதரவை வழங்கும் வகையில் தேசிய ஐக்கிய முன்னணியினரும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். இது முஸ்லிம்களின் நிலைமை. இவ்வாறிருக்க அரசுக்கும் நாடாளுமன்றத்தில் இருந்த ஒரு பிரேரணையையும் நிறைவேற்ற வேண்டுமாயின் தமிழ் கூட்டமைப்பையும், ஏனைய தமிழ் கட்சிகளையும் நம்பியிருக்க வேண்டியுள்ளது. அரசாங்கத்தின் நிலைமை இப்படியிருக்கையில், ஜனாதிபதியின் பொதுஜன முன்னணி என்ன செய்கிறது?

18ஆவது, 19ஆவது அரசியலமைப்புச் சீர்திருத்தத்தம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகள் ஜனாதிபதியின் கரங்களை வலுப்படுத்தியுள்ளன. நிறைவேற்று அதிகாரம் இருந்தும் கூட அடங்கிப் போயிருக்கும் ஜனாதிபதிக்கு ஆறுதலும் கிடைத்திருக்கிறது. நிறைவேற்று அதிகாரம் உடைய நிறைவேற்று முறையை கொண்டு வந்த ஐக்கிய தேசிய கட்சி, அதே அதிகாரங்களைப் பறிக்க முற்பட்ட வேளையில் ஏற்பட்ட பின்னடைவு, ஜனாதிபதியை ஓரங்கட்டும் முயற்சிகளுக்குத் தடைக்கல்லை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி கடந்த வியாழக்கிழமை இரவு நாட்டு மக்களுக்கு


தொண்டா

ஆற்றிய உரை அவரின் அதிகாரங்களை ஆளும் அரசாங்கமும் மீண்டும் அனுசரித்துபோக வேண்டிய நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. அத்துடன் சமாதான முன்னெடுப்புகளில் அவரின் செயற்பாடுகள் பாரிய பாதிப்பை ஏற்படுத்தாது என உணர்த்தியிருக்கிறது.

ஜனாதிபதியின் முன்னைய உறுதிமொழிகளில் இலங்கையின் அரசியல் கட்சியினரும் பெரும்பாலான பொதுமக்களும் நம்பியிருந்திருக்கின்றனர். எனினும் தற்போதும் பொறுப்பு வாய்ந்த சூழ்நிலையில் அவரின் உறுதிமொழி அடங்கிய கருத்துக்களில் மாறுபாடுகள் இருக்காது என்றே நம்பப்படுகிறது. தாம் ஜனாதிபதியின் அதிகாரங்களை முற்றாக ஒழிப்பதனையே விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ள அவர், அதனை மாற்றுத் தேர்தல் முறை ஒன்றின் மூலம் செய்யலாம் என்ற கருத்தை வலியுறுத்தியுள்ளார். இதனை விடுத்து ஜனாதிபதியின் அதிகாரங்களைப் பலாத்காரம் மூலம் பறிக்க முற்படுவது நடைமுறை அரசியலமைப்பின் கீழ் சாத்தியமாகாது என அவர் தெரிவித்துள்ளார். அதேநேரம் கடந்த வெள்ளிக்கிழமை மாத்தளையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவர்- தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களை அரசு வெளிப்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையையும் விதித்துள்ளார். இதனைத் தவிர ஜனாதிபதியின் பொ.ஐ.முன்னணி மாற்று அரசாங்கம் ஒன்று குறித்த முன்னெடுப்பிலும் தமது தீவிரத்தைத் திரைமறைவில் செய்துவருகிறது.

இதனடிப்படையில் இதுவரை நாடாளுமன்ற பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருக்கும் முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர்கள், ஐக்கிய தேசிய கட்சியின் முன்னிலை உறுப்பினர்கள் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிர ஸின் உறுப்பினர்கள் ஆகியோரை ஜனாதிபதி சந்தித்து மாற்று அரசாங்கம் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார். எனினும் இந்த விடயத்திலும் அரசியலமைப்பு தடையாக இருப்பதனால் பொதுஜன ஐக்கிய முன்னணியின் மாற்று அரசாங்க நகர்வும் தாமதப்பட்டுள்ளது. இதன் பிரதிபலிப்பே ஜனாதிபதியின் கடந்த வியாழன் உரையில் வெளிபபடுத்தப்பட்டிருந்தது. இதற்கிடையில் ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் - 10 மாவட்டங்களில், முதற்கட்ட தாய்லாந்துப் பேச்சுவார்த்தை தொடர்பாக கருத்துக் கணிப்பு ஒன்றை நேற்று முதல் ஆரம்பிக்கின்றது. இந்த கருத்துக் கணிப்பு சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பில் நடத்தப்படுகிறதோ? இல்லையோ? அரசாங்கத்தின் மீது மக்களின் தற்போதைய நிலைப்பாட்டை அறிவதற்கு நடத்தப்படுகிறது என்பதே உண்மையாகும்.

இந்த நிலையில் தாய்லாந்தில் அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் சமநிலையில் 2ஆம் கட்ட பேச்சுவார்த்தை ஒன்றை நோக்கி முன்னேறியுள்ளன. இலங்கையில் நிரந்தர அரசாட்சி. இல்லாமல் தமிழீழ விடுதலைப் புலிகளுட


ரணில்

னான பேச்சுவார்த்தையில் தீமானம் ஒன்றை அரசாங்கத் தரப்புக்கு மேற்கொள்ள முடியாது. அதற்காக தற்போதைய அரசியல் இறுக்க நிலையில் இணக்கப்பாட்டுடனான முன்னெடுப்பு ஒன்றே சிறந்தது எனக் கருதப்படுகிறது.

அதனடிப்படையில் ஐக்கிய தேசிய கட்சி உள்ளிட்ட ஐக்கிய தேசிய முன்னணியை தொடர்ந்து மேலும் 3 வருடங்களுக்கு ஆட்சி செய்ய விடுவது அல்லது அதனுடன் இணைத்து தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது என்ற இரண்டு விடயங்களே தற்சமயம் இலங்கை அரசியலில் ஸ்திரநிலையை ஏற்படுத்தும்.

தேசிய அரசாங்கம் நிறுவப்பட்டால் சிறுபான்மை கட்சிகளுக்கு பாதகம் என்ற நிலைப்பாட்டுக்கு அப்பால் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு மத்தியில் நிரந்தர ஆட்சி ஒன்றின் மூலமே அமைய முடியுமெனபது குறிப்பிடத்தக்கது. அதற்காக


ரவூவ் ஹக்கீம்

இரண்டு தரப்பும் தேசிய நலன் கருதி விட்டுக்கொடுப்புடன் ஒன்று சேர்வதே நாட்டின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும். அத்துடன் சமாதான நகர்வையும் துரிதப்படுத்தும். இதனை விடுத்து கட்சி நலன்களுக்கு இரண்டு தரப்புகளும் முன்னுரிமை கொடுக்குமாயின் அது நாட்டின் வீழ்ச்சிக்கு வழி வகுக்கும் என்பதை மறுதலிக்க வாய்ப்பில்லை. ❖

# பெரியோரைப் போற்று; நீ நீடூழி வாழ்வாய்

## ஞாயிறு சிந்தனை

**எஸ்.யேசுதாஸ்,** *கொழும்புத்துறை.*

ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்வில் பல நிலைகளை சந்தித்தே இவ்வுலக வாழ்வை நிறைவு செய்து கொள்கிறான். மழலையாய், சிறுவராய், இளையோராய், குடும்பத்தலைவனாய், முதியோராய் பல படிகளை நாம் கடக்க வேண்டியுள்ளது. ஒவ்வொரு பருவத்தினரும் மற்றைய பருவத்தில் வாழ்வோரைச் சார்ந்தே தமது இருப்பை நகர்த்துகின்றனர். இது மனித வாழ்வியலின் நியதி.

இந்த வகையில் முதியோர் பல வழிகளில் பிறரின் உதவிகள், அன்பு, அரவணைப்பு, பாசம், புரிந்துணர்வு என்பவற்றை எதிர்பார்க்கும் தன்மையிலேயே உள்ளனர். ஏனென்றால் இவர்கள் தமது குடும்பத்திற்காக, சமூகத்திற்காக, நாட்டிற்காக அயராது உழைத்து உரமூட்டி தம்மைத் தேய்த்து எம்மை வளர்த்து இன்று நலிந்துபோய் உள்ளனர். எனவே இவர்கள் மட்டில் நாம் அக்கறையும், கரிசனையும், பரிவும் காட்ட வேண்டியது எமது முக்கிய கடமையாகும்.

மாறாக இன்று எமது மத்தியில் முதியோரை, பெரியோரை இகழ்வதும், ஒதுக்குவதும் மலிந்து காணப்படுகிறது. 'வயது போனா ஒரு மூலையில் போய் இருக்க வேண்டியது தானே, எங்கட அலுவல்கள் எங்களுக்குத் தெரியும்' என அவர்களை ஓரங்கட்டி பிரித்து வாழும் சந்தர்ப்பங்கள் பல குடும்பங்களில் நிறையக் காணப்படுகிறது.

தங்களது நீண்டகால வாழ்வின் பட்டறிவால், உயர்வு, தாழ்வு நிலைகளால் பல பாடங்களைக் கற்றுத் தொகுத்து வைத்திருக்கும் ஓர் வாழ்க்கைப் புத்தகமே இந்த முதியோர்கள். அவர்களது நல்அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் நாம் ஒதுக்கி விட முடியாது. இவர்கள் சுயமாகத் தமது கடமைகளை செய்யும்போது நாம் அவர்கள்மீது காட்டும் கவனத்திலும் பாக்க இயலாமை நேரங்களிலேயே கரிசனை, அக்கறையோடு பராமரிக்க வேண்டும். இன்றைய இளையோரே நாளைய முதியோர். எனவே நாம எந்த அளவையால் அளக்கிறோமோ அதே அளவுகோலால் எமக்கும் அளக்கப்படும் என்பதை மறந்துவிடக்கூடாது.

இறைமகன் இயேசு பேச்சு தனது பகிரங்கப பணிவாழ்வை ஆரம்பிக்கும் முன்னர் தனது பெற்றோர், பெரியோர்க்கு பணிந்து அவர்களது கடமைகளை, கட்டளைகளை நிறைவேற்றி வாழ்ந்து வந்தார். அவரது சாயலாக உலகும் நாமும் அவ்வாறே வாழ எதிர்பார்க்கிறார். அதுவே எம்மை இறை மகிமைக்கு இட்டுச் செல்லும் என வாக்குறுதி தருகிறார்.

தாய், தந்தையரை போற்று என்பதே வாக்குறுதியோடு கூடிய கட்டளைகளுள் முதலாவது அப்போது மண்ணுலகில் நீ நலம் பெறுவாய், நீடுழி வாழ்வாய் என்பது அவ்வாக்குறுதி. (எபே;6:2-3)

எமது குடும்பத்தில் அயலில் வாழும் பெற்றோர், முதியோரைப் புரிந்துணர்வுடன் ஏற்றுக்கொண்டு அவர்களை பராமரித்து அன்பு, பாசத்துடன் உரையாடி மனச்சுமைகளை குறைக்க முற்படுவோம் அப்போது தான் அவர்களும் மனநிறைவுடன் மகிழ்வாய் வாழ்வர்.

தற்போது பல முதிய குடும்பங்கள் பிள்ளைகள், உறவினர் வெளி நாடுகளில் வாழ இங்கே தனிமையில் அங்கலாய்ப்புடன் நாட்களை நகர்த்துகின்றனர். இவ்வாறு ஏக்கத்துடன் பாதுகாப்பின்றி வசிப்போரை இனங்கண்டு அவர்களுக்கு அரணாக, ஊன்றுகோலாகச் செயற்படுவோம். எமது ஆடம்பர பொழுதுபோக்கு வழிகளைத் தவிர்த்து முதியோரின் நற்பணிகளில் ஈடுபட்டால் எமது நாட்டில் முதியோர் இல்லங்கள், அனாதை விடுதிகளின் எண்ணிக்கையை குறைத்துக் கொள்ளலாம்.

இவ்வாறு நாம் செய்யும் நற்செயல்களும் அதன் சிறப்பும், மகிமையும் இறைவனையே சென்று அடைகிறது. நாமும் இறுதிநாளில் இறைவன் திருமுன் செல்லும்போது வாருங்கள் என் தந்தையின் ஆசி பெற்றவர்களே. உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்துள்ள அரசு உங்களுக்கு உரிமையாகும். ஏனெனில் பசியாயிருந்தேன்;எனக்கு உண்ணக் கொடுத்தீர்கள். தாகமாய் இருந்தேன்; எனக்கு குடிக்கக் கொடுத்தீர்கள். அந்நியனாய் இருந்தேன்; என்னை வரவேற்றீர்கள். ஆடையின்றி இருந்தேன்;. என்னை உடுத்தினீர்கள். நோயுற்றிருந்தேன்; என்னை பார்க்க வந்தீர்கள். (மத். 25:35-36) என மகிழ்வுடன் எமக்கு அரசுரிமை அளிப்பார்.

எனவே முதியோர், பெற்றோர் எமது முதுசங்கள்.. அரிய பண்பாட்டு கலைச்சான்றுகள் தேசத்தின் பழம்பெரும் சொத்துக்கள் என உணர்ந்து கொள்வோம். அவர்களைப் பாதுகாப்போம். இறைவிழுமியங்களின் விழுதுகள் ஆவோம்.

# இந்தியா - கொழும்பு பயணிகள் கப்பல் சேவை அடுத்த மாதம் 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும்

(கொழும்பு)

கொழும்புக்கும் தூத்துக்குடிக்கும் இடையிலான கப்பல் சேவை அடுத்த மாதம் 10ம் திகதியளவில் ஆரம்பமாகும் எனத் தெரியவருகின்றது. இந்திய-சிறிலங்கா அமைச்சர்களுக்கிடையில் எதிர்வரும் 8ம் திகதி கைச்சாத்திடப்படவுள்ள ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இக் கப்பல் சேவை ஆரம்பமாகும்.

தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையிலான கப்பல் சேவையை நடத்துவதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. முன்னர் காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் சேவையில் ஈடுபட்ட 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலே இச் சேவையில் ஈடுபடவுள்ளது.

நாடுகளுக்கிடையிலான சேவையை நடத்துவதற்கு சர்வதேச விதிகளைக் கொண்டதாக 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் மறுசீரமைக்கப்பட்டுள்ளது. திருகோணமலைத் துறைமுகத்தில் இவ் வேலைகள் பூர்த்தியடைந்த நிலையில் நிற்கும் 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலின் பெயரும் மாற்றப்படவுள்ளது. இறுதி அறிவித்தல் கிடைத்ததும் அடுத்த சில நாட்களில் 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் திருகோணமலைத் துறைமுகத்திலிருந்து புறப்பட்டு கொழும்பு துறைமுகத்துக்குச் செல்லும் எனத் தெரியவருகின்றது.

கொழும்பிலிருந்து தூத்துக்குடிக்கான கப்பல் சேவையில் 300 பயணிகளை ஒரே தடவையில் ஏற்றிச் செல்ல முடியும் என்றும் இரு வழிக் கட்டணமாக 6 ஆயிரம் ரூபா அறவிடப்படும் எனவும் தெரியவருகின்றது.

இந்தச் சேவையின் மூலம் வர்த்தகர்களும் யாத்திரிகர்களும் அதிகம் பயனடைவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# நோர்வே குழுவினரைச் சந்திக்க மறுத்தமை சந்திரிகாவின் துணிச்சலைக் காட்டுகிறது!

## நாடாளுமன்றில் விமல் வீரவன்ச

(கொழும்பு நிருபர்)

இலங்கைக்கு வந்த நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தலைமையிலான விசேட தூதுக் குழுவை சந்திக்க ஜனாதிபதி மறுத்தமை அவரது துணிவையும், நாட்டின் இறைமையைப் பாதுகாக்கும் கடமைப் பொறுப்பையும் வெளிப்படுத்துவதாக ஜே.வி.பி.யின் பிரசார. செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாகவும் நோர்வேயின் மத்தியஸ்தம் தொடர்பாகவும் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த உரையின்போது விமல் வீரசிங்க நோர்வேயின் சமாதான முயற்சிகளைக் கடுமையாகச் சாடியிருந்தார். அரசும், புலிகளும் இணைந்து கூட்டுச்செயலணி அமைக்க முடிவு செய்துள்ளமை நாட்டுக்குப் பாதகமானதாகும். இது விடுதலைப்புலிகளை ஒரு அரச இயந்திரமாக மாற்றப் போகிறது எனத் தெரிவித்த விமல் வீரவன்ச அரசு இது தொடர்பாக விளக்கமளிக்க வேண்டும் எனவும் கூறியிருந்தார்.



இதையடுத்து நாடாளுமன்றத்தில் கடும் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது. உறுப்பினர்கள் கடும் வாதப்பிரதிவாதங்களில் ஈடுபட்டதால் ஒரு மணிநேர உரைகளை நாடாளுமன்ற குறிப்பேட்டில் இருந்து நீக்கிவிடுமாறு சபாநாயகர் ஜோசப மைக்கல் பெரேரா உத்தரவிட்டார்.

# வட - கிழக்கு வைத்திய சாலைகளுக்கு 400 தாதிகள் புதிதாக நியமிக்கப்படுவர்



## சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன

வடக்கு- கிழக்கு வைத்தியசாலைகளில புதிதாகப் பயிற்சிகள் முடித்துக் கொண்ட 400 தாதியர்கள் நியமிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த வருடம் புதிதாகப் பயிற்சிகளை முடித்துக் கொண்ட 2000 தாதியரில் 400 பேர் வடக்கு- கிழக்கு பகுதிகளில் பணியில் ஈடுபடுத்தவுள்ளனர். இப் பயிற்சிகளை முடித்துக் கொண்டோருக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் நடைபெற்றது.

# மீள்குடியமர்வு புனர்வாழ்வு நடவடிக்கைகளை கவனிக்க தனியான நிர்வாகக் கட்டமைப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் மீள் குடியமர்வு மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கென தனியான நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்படவுள்ளது. இப் புதிய நிர்வாகக் கட்டமைப்பு மாவட்டத்தின் பல்வேறு மட்டங்களிலும் அமைக்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளையும் ஒருங்கிணைக்கும் வகையில் மாவட்ட மட்டத்தில் ஒரு குழு இயங்கும். மாவட்டப்புனர்வாழ்வு இணைப்புக்குழு என்ற பெயரில் இக்குழு செயற்படும். யாழ்.செயலயகத்தில் இதன் அலுவலகம் இயங்கும். இதற்காக தனியான உத்தியோகத்தர்கள் நியமிக்கப் படவுள்ளதுடன் ஏனைய நிர்வாகக் கட்டமைப்புக்களும் தனியானதாக அமைக்கப்படவுள்ளது.

இவற்றை விட பிரதேச செயலர் மட்டத்திலும், ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாகவும் புனர்வாழ்வு இணைப்புக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன. பிரதேச செயலர் பிரிவு ரீதியாக அமைக்கப்படவிருக்கும் மேற்படி குழு ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் தமது அலுவலகங்களைக் கொண்டிருக்கும் இவற்றுக்கு அப்பகுதியின் பிரதேச செயலரே பொறுப்பாகச் செயற்படுவார்.

எதிர் காலத்தில் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ள விருக்கும் அனைத்து புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு, மீளக்குடியமர்வு நடவடிக்கைகள் மேற்படி தனியான நிர்வாகக் கட்டமைப்பிற்கூடாகவே மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த ஆண்டின் இறுதிப்பகுதி முதல் இனி வரும் காலங்களில் யாழ்.மாவட்டத்தில் புனர்வாழ்வு மற்றும் மீளக்குடியமர்வு தொடர்பான பல்வேறு செயற்திட்டங்கள் சமகாலத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன. எனவே இவ்வாறான. அனைத்துச் செயற்திட்டங்களையும் ஒருங்கிணைக்கும் வகையிலும் துரிதப்படுத்தும் வகையிலும் மேற்படி நிர்வாகக் கட்டமைப்பிற்கூடாக செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

(க)

# இன்றைய நாள் இனிய நாள்

**27.10.2002 - ஞாயிற்றுக்கிழமை**

| | |
|---|---|
| மேடம் :- | தேகசுகம் நன்று, பணவரவு, மௌனநிலை, கலைநிகழ்ச்சியில் மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம். |
| இடபம் :- | தேகசுகக் குறைவு, தேவையற்ற செலவு, பெண்களால் சண்டை, மனச்சஞ்சலம், கல்வி முன்னேற்றம். |
| மிதுனம் :- | தேகசுகம் நன்று, பணவரவு சமம், தெய்வவழிபாடு, சமய அறிஞர் தரிசனம், நண்பர்கள் உறவு, கல்வி முன்னேற்றம். |
| கர்க்கடகம் :- | தேகசுகக் குறைவு, கர்வத்தினால் செலவு, தேவைக்கு மிஞ்சிய உணவு, பானங்களைத் தவிர்க்கவும், கல்வி முன்னேற்றம். |
| சிங்கம் :- | தேகசுகம் நன்று, பணவரவு பெண்களால் மகிழ்ச்சி, கலைநிகழ்ச்சி, கல்வி முன்னேற்றம். |
| கன்னி :- | தேகசுகம் நன்று, பொதுச் சேவையில் பங்கு, வெளியூர் பயணம், சுற்றுலா மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம். |

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்
அவர்களின் சகோதரரின் புத்திரர்
இ.வெங்கடேச ஐயர்.

| | |
|---|---|
| துலாம் :- | தேகசுகக்குறைவு, அநாவசியச் செலவு, பொதுச் சேவையில் மனம்தாவும், வயிற்றில் சுகயீனம், கல்வி சமநிலை. |
| விருச்சிகம் :- | தேகசுகக்குறைவு, தேவையற்ற பயம், பிரயாணத்தில் மனக்கவலை, புதிய ஒப்பந்தங்கள் தவிர்க்க வேண்டும், கல்வி முன்னேற்றம். |
| தனு :- | தேகசுகம் நன்று, பணவரவு, வாகனப்பயன், அறுசுவையுண்டி, ஆடைஅணிவதில் மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம். |
| மகரம் :- | தேகசுகம் நன்று, பணவரவு, தெய்வழிபாடு, எடுத்தகாரியம் வெற்றி, கல்வி முன்னேற்றம். |
| கும்பம் :- | தேகசுகக்குறைவு, புத்திரர் தேக சுகக்குறைவு, வைத்தியச் செலவு, கல்வி முன்னேற்றம். |
| மீனம் :- | தேகசுகக் குறைவு, வாகனச் செலவு, மனப்பயம், யாரையும் நம்பாததன்மை, கல்வி சமம். |

# மாவட்டங்கள் தோறும் பாதுகாப்புக் குழுக்கள்

(யாழ்ப்பாணம்)

மாவட்ட மட்டங்கள் தோறும் பாதுகாப்புக் குழுக்கள் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இவ் விடயம் தொடர்பாக அனைத்து மாவட்ட செயலகங்களுக்கும் சுற்று நிருபம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இப் பாதுகாப்புக் குழுவில் அப்பகுதியின் பொலிஸ் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் மாவட்டத்தின் அரசாங்க உயர் அதிகாரிகள் ஆகியோரை உள்ளடக்கியதாக இப்பாதுகாப்புக்குழுக்கள் அமைக்கப்படவுள்ளன. இக்குழுவில் அனைவரும் இணைந்த அமர்வுகள் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் நடாத்துவதற்கும், திட்டமிடப்பட்டுள்ளது. (க)

## ஜீவஒளிமாநாடு கிளிநொச்சியில்

ஜீவஒளி சிறுவர் கழக முதலாவது மாநாடு இரண்டாவது நாளாக இன்று முறுகண்டி தென்னிந்திய திருச்சபை வளாகத்தில் நடைபெறுகின்றது.

வண.பிதா யோசுவா தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் 40 சிறுவர்கள் கலந்து கொள்கின்றனர்.

# சின்னஞ்சிறு சிறு செய்திகள்

## காரைநகர் பஸ் தடம் புரண்டது

(காரைநகர்)

காரைநகர் டிப்போவிற்கு சொந்தமான வடபிராந்திய போக்குவரத்து சபையின் பஸ் பொன்னாலைச் சந்திக்கு அண்மையில் மற்றுமோர் வாகனத்திற்கு வழிவிடும்பொழுது தடம் புரண்டது. நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் பயணிகள் தெய்வாதீனமாக எவ்வித காயங்களுமின்றி தப்பியுள்ளனர். (52)

## புகைப்படக் கண்காட்சியில் கலந்துகொள்ளலாம்

வடகிழக்கு மாகாண பண்பாட்டு அலுவலகத்தினால் புகைப்படக் கண்காட்சி ஒன்று நடத்தப்படவுள்ளது.

வடகிழக்கு மாகாணத்துக்குட்பட்ட இயற்கைக்காட்சிகள், தொல் பொருட்கள், பண்பாட்டு அம்சங்கள் அடங்கிய புகைப் படங்களை தத்தமது பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தர் மூலம் அனுப்பலாம். சிறந்த புகைப்படத்துக்கு பாரிசில்களும் வழங்கப்படும் எனவும் இப் புகைப்படங்கள் அனைத்தும் கண்காட்சியின் பின் உரியவர்களிடம் கையளிக்கப்படும் எனவும் ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. (72)

## மின்னலுக்கு இருவர் பலி

(புத்தளம்)

புத்தளம் இலவங்குளத்தில் மின்னலுக்கு இருவர் பலியாகியுள்ளனர்.

அண்மையில் அடிக்கடி பெய்து வரும் மழை நேரத்தில் ஏற்படும் இடி மின்னலால் இப்பகுதியில் உயிரழப்புக்கள் ஏற்பட்டு வருகின்றன.

## மரக்கறிவிதைகள் அன்பளிப்பு

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கு கிராமசேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட வறுமைக் கோட்டிற்குக் கீழ்ப்பட்ட இளம் விதவைகள், அங்கவீனர்களை உடைய விவசாயக் குடும்பங்களுக்கு சர்வோதய நிறுவனம் அடிக்கட்டுப் பசளை மற்றும் மரக்கறி விதைகளை வழங்கியுள்ளது.

இவை புன்னாலைக்கட்டுவன் தெற்கு கிராமசேவையாளர் அலுவலகத்தில் வைத்து, கடந்த 24 ஆம் திகதி சர்வோதயப் பிரதிநிதியால் வழங்கப்பட்டன.

அத்துடன் மரக்கறி விதைகளாகப் போஞ்சி, கோவா, பீற்றூட், கறிமிளகாய், கத்தரி மற்றும் வெண்டி விதைகள் இங்கு இனங்காணப்பட்ட ஏழு விவசாயக் குடும்பங்களுக்கே வழங்கப்பட்டுள்ளன. (83)

## கூட்டணி அலுவலகத்தில் கலந்துரையாடல்

(பண்டத்தரிப்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு ஸ்ரான்லி வீதி-யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டணி அலுவலகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் நடைபெறவுள்ளது.

"இன்றைய அரசியல் சூழ்நிலை" என்ற விடயம் தொடர்பாக இடம்பெறும் இக்கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் என்.இரவிராஜும் கலந்துகொள்வார். (43)

## சாயி சேவை நிலைய மாநாடு

(மானிப்பாய்)

வடபிராந்திய இணைப்புக் குழு சத்தியசாயி நிறுவனத்தால் நடத்தப்படும். சேவை மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வு திருநெல்வேலியில் இயங்கும் ஸ்ரீ சத்யசாயி சேவை நிலைய மண்டபத்தில் காலை 8 மணிக்கு ஆரம்பமாகும். (100)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பொன்னாலைக் கடலில் மின்னல் தாக்கி இளம் குடும்பஸ்தர் துடிதுடித்து மரணம்

(காரைநகர்)

பொன்னாலைக் கடற்பரப் பில் தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை மின்னல் தாக்கியதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். பொன் னாலை 3ம் பாலத்தருகில் மீனவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது இம் மின்னற்தாக்குதல் இடம்பெற்றது.

நேற்று அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் காரைநகர் பிட்டியெல்லையைச் சேர்ந்த ஏரம்பு பேரின்பநாதன் (வயது 35) என் பவர் உயிரிழந்ததுடன், இவரு டன் சென்ற மற்றைய நபர் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (52)

## இனமுரண்பாடுகளைத் தீர்க்க....

பாளர் இளம்பரிதியும், யாழ் பல் கலைக்கழக துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளையும் கலந்து கொண்டனர். பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.வேலாயுதம், பிரற்றிக் ஈபர்ட் மன்றத்தின் இலங்கைக்கான பிரதிநிதி நைறந் வேள்ஸ், மன்றத்தின் உதவியாளர் அலேயா, தமிழர் ஆசிரியர் சங் கத்தின் பொதுச் செயலாளர் மகாசிவம், தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட பொதுச் செயலாளர் பஞ்சலிங்கம் ஆகி யோரும் சிறப்பு விருந்தினர் களாக இதில் கலந்து கொண் டனர்.

இந் நிகழ்விற்கு தமிழர் ஆசிரியர் சங்கத்தின் துணைத் தலைவர் திருமதி சரஸ்வதி ஜெயராஜா தலைமை தாங்கினார்.

இந் நிகழ்விற்கு கொழும்பிலிருந்து வருகை தந்த பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பி னர் வேலாயுதம் உரை நிகழ்த்துகையில் -

யாழ்ப்பாணம் என்பது ஓர் கறை படிந்த சரித்திரம். யாழ் ப்பாண மக்கள் பல துன்பங்க ளையும் துயரங்களையும் அனுபவித்துள்ளனர். இவர்களை நான் சும்மா ஓர் சுற்றுலா மேற்கொண்டு பார்க்கக் கூடாது. மாறாக ஓர் செயற்பாட்டுடன் வர வேண்டும் என நினைத்துத்தான் இவ்வளவு காலமும் இங்கு வராமல் இருந்தேன். தற்போது நல்லிணக்கத்திற்கும் சமாதானத்திற் குமான கல்வி என்ற செயற்பாட் டுடன் வந்து யாழ்ப்பாணத்தைப் பார்வையிடுகிறேன் என அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் கலந்து கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி உரையாற்றுகையில் -

எங்களுடைய விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த நாளிலிருந்து எங்கள் இயக்கமும் தலைவரும் சமாதானத்தையே வலியுறுத்தினார்கள். நாம் சமாதானமாக வாழ விரும்புகிறோம். இச்சமாதானம் என்பது எமது மக்கள் சமமாகவும் கௌரவமாகவும் மரியாதையாகவும் வாழ வேண்டும் என்பதே.

சிலர் சமாதானத்தை வெறும் கோஷமாக பார்க்கின்றனர். ஆனால் நாம் சமாதானத்தை எமது வாழ்க்கையாகப் பார்க் கின்றோம். இவ்வடிப்படையில் தான் நாம் எமது 17 ஆயிரம் மாவீரர்களையும் 80 ஆயிரம் மக்களையும் இழந்துள்ளோம்.

கொழும்பில் யுத்த நிறுத்தத்திற்கு முன் இராணுவ சோதனைகளும் இராணுவக் காவல் நிலையங்களும் பாதுகாப்பு கெடுபிடிகளும் அதிகரித்திருந்தன. ஆனால் இன்று இவையெல்லாம் அகற்றப்பட்டுள்ளன. இதேபோல் வன்னியிலும் காவல் நிலைகள் எல்லாம் அகற்றப்பட்டுள்ளன. ஆனால் யாழ்.மாவட்டத்தில் மாத்திரம் இராணுவக்காவ லரண்களும் படை நிலைகளும் சோதனைச் சாவடிகளும் இன்னும் அகற்றப்படவில்லை. இதனால் யாழ். மக்களுக்கு புரிந்துணர்வின் மாற்றங்கள் பெரிதாகத் தெரியவில்லை. வட கிழக்கிலுள்ள, மக்கள் இன் னமும் இயல்பு வாழ்க்கை வாழ வில்லை.

இனங்களிடையேயும், மதங்களிடையேயும் முரண்பாடுகளை, வளர்ந்து வரும் நாகரிக முன்னேற்றத்தில் அறிவியல் ரீதியாக சிந்தித்துத் தீர்க்க முன்வர வேண்டும். இது கல்வியாளர்களாலேயே முடியும். ஓர் சமூகத்தின் தலைமையகமே இக் கல்வியாளர்கள் தான். பெரும்பாலும் இவர்கள் ஓர் அரசியல் மாற்றத்தைக் கூட ஏற்படுத்தலாம் என அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம் பரிதி மேலும் தெரிவித்தார்.

### 2ஆம் கட்ட..

சொல்ஹெய்ம் இந்த இடத்தின பொருத்தப்பாடு குறித்து ஆராய்ந்து வருவதாகவும் அதற் கான ஏற்பாடுகளை மேற் கொண்டு வருவ்தாகவும் தெரி கிறது.

ஆனால், இந்த நொகன்பத்த மின் - ரோஸ் கார்டன் ஹோட் டேல், சட்டாகிப்பில் இருந்து 30 கி.மீ.க்கும் அதிகமான தூரத்தில் அமைந்துள்ளது. இக் ஹோட்டேல் பத்திரிகையாளர் கள் தங்குதல் போன்ற பல வசதிகளுக்கு ஏற்றது என்ப தாலும் மருத்துவ வசதிகளுக்கா கவுமே தெரிவு செய்யப் பட்டி ருக்கலாம் என நம்பப்படுகிறது.

### பயங்கரவாத...

பையின் சமாதான மாநாடு கொழுமபில் நடைபெற்றது. இம்மாநாட்டிலேயே மேற்படிவிட யம் குறித்து தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (க)

### முக்கியகூட்டம்

வலி வடக்கு, தெற்குப் பொது அமைப்புக்களின் ஒன்றி யத்தினால் 30ஆம் திகதி நடத்தப்படவுள்ள வலி. வடக்கு விடுவிப்புக்கான போராட்டம் தொடர்பாக இன்று ஞாயிறு மாலை 3.30 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலய மண்டபத்தில் அவசரக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இதில் வலி வடக்கு, வலி.தெற்கு பிரதேச செயலர் கள் பிரிவுக்குட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், ஆலய பரிபா லன சபைகள், பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், தெங்கு பனம் பொருள் அபிவிருத்திச் சங்கங்கள், நலன்புரி நிலை யங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் மற்றும் வலி.வடக்கு, தெற்கு விவசாயிகள் சங்க உறுப்பினர்கள், வலி.வடக்கு, தெற்கு புனர்வாழ்வுக்கழக உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

### பிழையான...

அங்கு அவர் தொடர்ந்தும் பேசுகையில் நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பு இந்த நேரத்தில் தயான நடவ டிக்கையிழும் சரியான வாய்ப்பிற் கேற்பவே அரசியல் நடத்த வேண் டும் இப்போது பகிஷ்கரிப்பில் ஈடுபடு வோர் அஷ்ரப் சொன்னதையே மதிக்க வில்லை எனவும் கூறி னார்.

### எமது துன்ப ...

உபதலைவர் தனபால சிங்கம், வலி. வடக்கு புனர் வாழ்வுக் கழகத் தலைவர் எஸ். பரமநாதன், சட்டத்தரணி சபா நாதன், ஆ.சி. நடராசா ஆகி யோர் நேற்று இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத் துக்கு நேரடியாகச சென்று இம் மகஜரை கையளித்தனர். அம் மகஜரின் விபரம் வருமாறு-

வலி. வடக்கு மக்களாகிய நாம் கடந்த பதினைந்து வருட காலமாக இடத்திற்கு இடம் புலம்பெயர்ந்து கொண்டு இருக்கும் இவ்வேளையில் - எம்மை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் அணுகுவதனை தங்களின் தயவான கவனத் திற்கு கொண்டு வருகின்றோம்.

அண்மையில் பரந்த விளம்பரத்தின் மூலம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியை அதன் சொந்த இடத்தில் இயங்க அனுமதித்ததாக தெரிவித்த போதும் யாழ். மாவட்டத்திலுள்ள முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றான அக்கல்லூரி இன்று யாழ். குடாநாட்டிலிருந்து அந்நியப்படுத் தப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட்டதன் பின்னர் யுத்த நெருக்கடிகளால் மாற்று வகையுணர்வுகளுக்கு ஒரு முடிவு வந்து அமைதி நிலை பேணப் படும் போதும், வலி. வடக்கு மக்களுக்கு அவ்வாய்ப்பு இன்னமும் கிடைக்கவில்லை என்பதனை அறியத்தருகின் றோம். தற்பொழுது ஏ-9 பாதை திறக்கப்பட்டு வன்னியிலிருந்தும் தென்னிலங்கையிலிருந்தும் மக்கள் யாழ். மாவட்டத்திற்கு வந்து கொண்டு இருக்கின்ற இவ்வேளையில் -வலி. வடக்கு மக்கள் தொடர்பில் எவ்வித முன்னேற்றங்களும் ஏற்படவில்லை என்பதனை 16.09 2002 திகதியன்று அனைத்து நடவடிக்கைகளுக்குமான கட்டளைத் தளபதிக்கு அனுப்பியிருந்த அறிக்கையில் தெரிவித்திருந்தோம். இதனது பிரதி தங்களுக்கும் அனுப்பி வைக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக் கது. மேற்படி கட்டளை அதிகாரி எம்மை பொறுமையுடன் இருக் கும்படி கோரியிருந்தார்.

எனினும் எமது துன்பங்களை பொறுத்துக் கொள்வதற்கும் ஒரு கால எல்லை உண்டு. இனிமேலும் இவ்வாறு நாம் போராட வேண்டிய நிர்ப்பந்தம் தேவைப்படக் கூடாது என அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது

### வலி.வடக்கு....

அனைத்து பொது அமைப்புக் களும் இணைந்து வலி.வடக்கு விடுவிப்புக்கான போராட்டம் என்ற இம் மாபெரும் கண்டனப் பேரணியை நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளன.

எதிர்வரும் 30ஆம் திகதி காலை மல்லாகம் சந்தியில் உள்ள பழம் பிள்ளையார் ஆலய முன்றலில் இருந்து இம்மாபெரும கண்டனப் பேரணி ஆரம்பமாக வுள்ளது. இப் பேரணி காங்கே சன்துறை வீதி வழியாகச் சென்று தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சென்றடையும். அங்கு அரசாங்க அதிபர், பிரதேச செய'லாளர், பாராளு மன்ற உறுப்பினர்கள், மனித உரிமைகள் ஆணைக குழுவினர், இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் ஆகியோரிடம் வலி.வடக்குப் பகுதியில் மக்களின் மீள் குடியமர்வை அனுமதிக்கும் படி கோரும் மகஜர்கள் கையளிக் கப்படவுள்ளன.

## துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செய்தியாளர் அமிர்தலிங்கம் பௌநந்தியினது அன்புத் தந்தை சங்கரப்பிள்ளை அமிர்தலிங்கம அவர்களின் பிரிவால் வாடும் அன்னாரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கெடுத்துக் கொள்வதுடன், அவரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

-நமது ஈழநாடு

## மரண அறிவித்தல்

**சங்கரப்பிள்ளை அமிர்தலிங்கம்**
**(துரைசிங்கம்)**

நாகர்கோவிலை பிறப்பிடமாகவும் துன்னாலை, கோவிற்கடவையை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை அமிர்தலிங்கம் நேற்று (26.10.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சங்கரப்பிள்ளை- கண்ணாத்தை தம்பதிகளின் அருமை மகனும், துன்னாலை கோவிற்கடவையை சேர்ந்த பகவதியம்மாவின் அன்புக் கணவரும், ஜெயரஞ்சன்(சுவிஸ்), பௌநந்தி (ஆசிரியர்), புகழேந்தி (லண்டன்), புவிதா(யாழ். பல்கலைக்கழகம்), புகழ்நந்தி ஆகியோரின் அன்பு தந்தையு மாவார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (27.10.2002) காலை 10மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் வேரண்டை மயானத்திற்கு எடுத்துச் செல் லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் ,உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

கோவிற்கடவை,
துன்னாலை மத்தி,
கரவெட்டி.

தகவல்
அ. பௌநந்தி
(மகன்)

(சி-093)





நமது ஈழநாடு
நடாத்தும்
க.பொ.த(சா/த) பரீட்சைக் கருத்தரங்கு 2002

2002 க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கு தயாராகும் மாணவமணிகளே!

உங்களுக்காக வெகுவிரைவில் பரீட்சைக் கருத்தரங்கு ஒன்று யாழ் நகரில் நடத்தவுள்ளது இப் பரீட்சைக்கு ஆயத்தமாகி வரும் உங்களுக்காக அனுபவமிக்க ஆசான்கள் இக் கருத்தரங்கில் கலந்து கொண்டு ஆலோசனைகள் மாதிரி வினாத்தாள்கள் பயிற்சி ஆகியவற்றை வழங்கவுள்ளனர்.

இக் கருத்தரங்கில் பங்கு பற்றி பயன் பெற விரும்பும் மாணவர்கள் கீழ்வரும் படிவத்தை பூர்த்தி செய்து அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பாக

மாணவர் மலர் பரீட்சைக் கருத்தரங்கு,
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் வரவை உறுதிப்படுத்த இப் பத்திரத்தை அனுப்பி வைப்பது அவசியமாகும். பிரவேசம் இலவசம். தேவையான காகிதாதிகள் வழங்கப்படும்.

பரீட்சைக் கருத்தரங்கு தொடர்பான முழுமையான விபரங்கள் செகுவிரைவில் நமது ஈழநாடு பத்திரிகையில் வெளிவரும்



நமது ஈழநாடு
க.பொ.த(சா.த) பரீட்சை கருத்தரங்கு -2002
பங்கு பற்றுவதற்கான விண்ணப்பம்

முழுப்பெயர்:-------------------- --------------------
முகவரி:------------------------------------------
பாடசாலை:----------------------------------------
பங்குபற்ற விரும்பும் பாட அமர்வுகள்:-----------------
(தமிழ். கணிதம். விஞ்ஞானம். ஆங்கிலம். சமூகக்கல்வீ வணிகவியல் பாடங்களுக்கான அமர்வுகளே நடைபெறும்) --------------------
ஒப்பம்


இப்பத்திரிகை- இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 27.10.2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.